as a NewsPaper


விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-19 | 05-11-2005 | சனிக்கிழமை | ஓசை-261



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

T.P:0712-610008

(சி-13213)

## தமிழர் தாயகத்தில் கட்டட வழவமைப்பு கட்டுமான வழிகாட்டு நெறிகள் நேற்று அறிமுகம்



தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டட வடிவமைப்புக் கட்டுமானங்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் நேற்று வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை கிளிநொச்சியில் நேற்று வடக்கு- கிழக்கில் செயலாற்றும் பொறியியலாளர்கள் சந்தித்தனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இந்த வழிகாட்டு நெறிகள் அறிமுகப் படுத்தப்பட்டன.இச்சந்திப்பின் போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் கலந்துகொண்டு தலைமையுரையை நிகழ்த்தினார்.

இத்தலைமையுரையின் போது தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தமிழர்தாயகப் பகுதியில் அனைத்து கட்டுமானப் பணிகளும் தமிழீழ தேசத்தின் எதிர்கால நல்வாழ்வைக் கருத்தில்கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையாகவுள்ளார்.

திட்டங்கள் மற்றும் கட்டுமானங்கள் முன்னெடுக்கும் போது அவை மக்கள் நலனை மையப்படுத்தியதாகவும் சூழல் பாதுகாப்பு அம்சங்களை கட்டாயமாக உள்ளடக்கியதாகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# போ.நி.க.குழு தலைமைப்பொறுப்பை கைவிடுவது குறித்து நோர்வே பரிசீலனை!

### அமைச்சர் எரிக் சூல்ஹெய்ம் தகவல்

**இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவது குறித்து நோர்வே பரிசீலிக்கும் என்று அமைதி முயற்சிகளுக்கான விசேட தூதுவரும் நோர்வே அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சூல்ஹெய்ம் அறிவித்துள்ளதாக நோர்வே போஸ்ட் இணையத் தளம் தெரிவித்துள்ளது.**

நோர்வே போஸ்ட் இணையத் தளம் தெரிவித்துள்ளதாவது; இலங்கை அமைதி முயற்சிகளின் அனுசரணையாளராகவும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பாளராகவும் நோர்வே செயற்பட்டு வருகிறது. நோர்வேயின் பணிகளை சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் களத்தில் பல்வேறு கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றன. சிறிலங்காவின் விமர்சனங்களையடுத்து கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் எரிக் சூல்ஹெய்ம், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பிலி ருந்து நோர்வே விலகிக்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் இப்படியான

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கைக்குண்டுடன் பிரவேசித்தவர் கைது

### மற்றொருவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்குள் கைக்குண்டுடன் நுழைந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். தப்பியோட முயன்ற ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.வவுனியாவிலிருந்து யாழ். நோக்கிச் சென்ற வாகனங் கள் நேற்றுக் காலை 11.30 மணியளவில் முகமாலைச் சோதனைச்சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த இடத்திற்கு அண்மையில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த இடத்தில் தரித்து நின்ற வாகனங்களை சோதனையிட முற்பட்ட போது ஒரு வாகனத்தில் இருந்து இருவர் சிறிலங்கா இராணுவ சோதனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் மாசியப்பிட்டியில் ஆணின்சடலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சண்டிலிப்பாய்-மாசியப்பிட்டிப் பகுதியில் நேற்றுக்காலை கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் இனந்தெரியாதநபரின் சடலமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச் சடலத்தால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பும் பீதியும் காணப்பட்டது.சுமார் 35 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ஆண்கள் அணியும் நீலநிற உள்ளாடையுடனும் வெள்ளைநிற ரீசேட்டுடனும் கைகள் இரண்டும் பின்பக்கமாக கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.இச்சடலத்தைக் கண்ட அப்பகுதி கிராம அலுவலர் உடனடியாக மானிப்பாய் பொலிசாருக்கு நேற்றுக் காலை 9.30 மணியளவில் தகவலை வழங்கியிருந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மிகவும் அபாயகரமான நிலையை நோக்கி நாம் நகர்த்தப்படுகின்றோம்

### -ரொய்ட்டருக்கு அளித்த செவ்வியில் சு.ப.தமிழ்ச்செல்வன்

யுத்தத்திற்கான முன்னெடுப்புகளை நோக்கி நாம் நகருகின்றோமா? என்று எம்மால் கூறமுடியாது; ஆனால் மிகவும் அபாயகரமான நிலையை நோக்கி நாம் நகர்த்தப் படுகின்றோம் என அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். ரொய்ட்டர் நிறுவனத்தின் கட்டுரையாளர் பீற்றர் ஆப்ஸ்க்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எந்தவொரு வேட்பாளரது உறுதிமொழிகளும் உள்ளத்திலிருந்து வெளிவருவது அல்ல இருவருமே தமிழர் மற்றும் சிங்களவர் வாக்குகளைப் பெறுவதற்காக "அமைதி" என்பதை ஏலம்விட்டுக் கொண்டுள்ளனர்.

"தேர்தல் முடிந்த பிறகு அவர்கள்அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் மறந்துவிடுவார்கள் நாம் முழுமையாகவே இந்தத் தேர்தல் குறித்து எதுவித அக்கறையும் கொள்ளவில்லை. நாம் பொறுப்பான ஒரு விடுதலை இயக்கம். எமது மக்கள் யாருக்கு வாக்களிக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ஷேயைத் தொடர்ந்து அடுத்த சமாதான உடன்படிக்கை இலங்கையில் ஏற்படவேண்டும்

### ஐ.நா. உள்ளக இடப்பெயர்வுப் பிரிவு பொறுப்பாளர்

(கொழும்பு)

இந்தோனேஷியாவின் ஆர்ஷே இனப்பிரச்சினைக்குப் பின்னர் உலகின் அடுத்த சமாதான உடன் படிக்கை இலங்கையிலேயே ஏற்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக இடப்பெயர்வுப் பிரிவின் பொறுப்பாளர் டெனிஸ் மக்மனாரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆசிய பசுபிக் வலய நாடுகளின் தேசிய மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பிலான சர்வதேச கருத்தரங்கைத் தொடக்கி வைத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்காவில் புதியஅரசாங்கம் வரும் மாதங்களில் நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்தி, உண்மையான அபிவிருத்தியை நோக்கிச் செல்லுமென எதிர்பார்க்கின்றோம்.தங்கள் நாட்டினுள் இடம்பெயர்ந்துள்ளவர்கள் பற்றிய பிரதான பொறுப்பு தங்களுக்கு இருப்பதனை நாட்டின் நிர்வாகிகள் மறப்பது அடிக்கடி நிகழ்கிறது. அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பினை

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் மகிந்தவின் கூட்டத்திற்கு மக்கள் பலவந்தமாக அழைப்பு

### ஈ.பி.டி.பி.யின் செயலால் விசனம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ நேற்று யாழ். சென்றிருந்த சமயம் அவரின் கூட்டமொன்றிற்கு ஈ.பி.டி.பியினரால் ஒருதொகுதி மக்கள் பலவந்தமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தமான கூட்டத்துக்கு வருமாறு பட்டதாரிகளையும்,தொண்டர் ஆசிரியர்கள், மற்றும் சமயாசமய சார்பு ஊழியர்கள் ஆகியோரையும் அழைத்த அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா

அவர்களை பலவந்தமாக வாகனங்களில் ஏற்றிச் சென்று நேற்றுக் காங்கேசன்துறை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் நடைபெற்ற மகிந்தராஜபக்ஷவின் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செய்துள்ளார். இவரது வரவை ஒட்டி பலாலி பாதுகாப்பு வலயப்பகுதியில் பிரச்சாரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் குடாநாட்டு மக்கள் முற்றுமுழுதாக

(12ஆம் பக்கம் பார்க்க)

# காந்தரூபன் அறிவுச்சோலை-சிறுவர் இல்லம்

## பணி நிலை வெற்றிடம்

**01 குழந்தை பராமரிப்பாளர்கள்:-**
இருபாலாரும்-30 வயதிற்கு மேற்பட்டோராக இருக்க வேண்டும்.

**02 சமையலாளர்கள்:-**
இருபாலாரும் -அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

**03 ஆசிரியர்கள்:-**
விஞ்ஞானம், விஞ்ஞான ஆய்வு கூடம், A/L இல் விஞ்ஞானம் அல்லது கணித பிரிவில் 03 பாடம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**04 அலுவலகர்கள்:-**
A/L இல் கலை அல்லது வர்த்தகப் பிரிவில் 03 பாடம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

☒ **நேர்முகத்தேர்வு**

காலம்:- 09.11.2005 – காலை.புதன் 09.00 மணி
இடம்:- அறிவுச்சோலை – சிறுவர் இல்லம் – கைவேலி
➤ குறிப்பு:-01. தகைமைச் சான்றுகளுடன் சமுகம் தரவும்
02. குறித்த நாளில் வரமுடியாதவர்கள் முன்னதாக அறியத் தரவும்

*நிர்வாகச் செயலகம்,*
*காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்.*

(6641)

# IOM international Organization for Migration

## Immediate Vacancy Notice

IOM Sri lanka Field Office in Jaffna Inviting Application form Qualified and Experienced Candidate For the following Positions
1. Project Assistant (Liveli hood -Agriculture)
2. Filed Assistant

**Responsibility Of project Assistant**
1. Carry out Liveli hoods urvey
2. Identification of beneficiaries for Liveli hood Projects
3. Delivery of income generation assets
4. Identification of Training needs and organizing programs
5. Monitoring of Projects and counseling
6. Developing market linkages
7. preparing Reports
8. promoting saving among beneficiaries
9. Tracking micro finance providers for the beneficiaries
10. Any other activites as assigned by project officer/head of field office

**Qualification and Skill Required**
1. Degree/ Diploma in related Fields (Ag riculture or sociology or Business Studies)
2. Skills in Project planning
3. planning, Analytiacl ,Communication and Report Writing Skills
4. Minimum 5 years Experience in GOVT/NGO
5. Fluency in English and Computer Skills

**Responsibility of Field Assistant**
1. Carrying out Liveli hoods urvey
2. Identification of beneficiaries for Liveli hood Project
3. Delivery of income generation assets
4. Identification of Training needs and organizing programs
5. Monitoring of Project and counseling
6. Developing market linkages
7. preparing Reports
8. prepare Project budgets return and maintaining of Project expenditure /Budget
9. Any other activities as assigned by Project officer /Head of field office

**Qualification and Skill Required**
1. Degree/ Diploma in accounting ,Business Administration or HNDA\
2. Computer Skills on Ms office
3. Working Experience in NGOO/GOVT
4. Good Analytical Communication and Report Writing Skill
5. Fluency in English

Send your CV with immediate Contact T. phos on before 10 November 05 to thw following address

**The Head/ Programme officer**
**IOM, 70 Temple Road,**
**Jaffna,**
**E-mail address iomja@sltnet.lk**

NOTE: Only the short Listed Candidates Will be Contacted For the Interview. Women are encoruraged to apply

(சி.13306)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## 2006 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

*(பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்)*

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 22.11.2005 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின்தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 14.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை **'செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம்'** என்ற முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 21.11.2005 ஆம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர் தமது அடையாள அட்டையைக்கொண்டு வருதல் வேண்டும்.

தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்து கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி நிரப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னராக சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரியின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையம் காரணம் காட்டாது ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தெகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம்மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் கேள்வித் தொகையில் 1/2 பங்கைச் செலுத்தி 28.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டும்.

### குறிப்பு:-

01 சுன்னாகம் மத்திய சந்தை, மருதனார்மடம் பொதுச்சந்தை என்பவற்றிக்குரிய விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் ரூபா 1500,000/= இற்குக் குறையாது வைப்பிலுள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02 ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கருவாட்டுக்கடை, கோழிக்கடைகளுக்கான ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் மூன்று மாத வாடகையுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட (VAT) வரியும் செலுத்தப்படல் வேண்டும்.

03 சந்தைகளைக் குத்தகைக்குப்பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3% இற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.

04 எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா.2.00 இற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 3.00 இற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.

05 தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்குப் புறம்பாக அத்தொகையின் 15% வற்வரியாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06 கேள்விப்பத்திரத் தொகையுடன் அதற்குரிய 15% வற்வரி செலுத்தப்படல் வேண்டும்.

07 இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிருபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

### அட்டவணை

| இல | சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட | 1000.00 | 10000.00 | 2960000.00 | - |
| 02 | உடுவில் கீளிச்சந்தை | 500.00 | 2000.00 | 78500.00 | - |
| 03 | உடுவில் ஆலடிச்சந்தை | 200.00 | 500.00 | 5000.00 | - |
| 04 | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 750.00 | 5000.00 | 661000.00 | 250.00 |
| 05 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 66500.00 | 250..00 |
| 06 | கருவாட்டுக்கடை இல.03 | 300.00 | 2000.00 | 18500.00 | 150.00 |
| 07 | கருவாட்டுக்கடை இல.04 | 300.00 | 2000.00 | 13000.00 | 150.00 |
| 08 | கருவாட்டுக்கடை இல.05 | 300.00 | 2000.00 | 11000.00 | 150.00 |
| 09 | கோழிக்கடை இல.06 | 300.00 | 2000.00 | 14000.00 | 150.00 |
| 10 | கோழிக்கடை இல.07 | 300.00 | 2000.00 | 25000.00 | 150.00 |
| 11 | கோழி உரித்தல் | 300.00 | 2000.00 | 39500.00 | 150.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | மருதனார்மடம் பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 1,000.00 | 10000.00 | 2711000.00 | - |
| 02 | இணுவில் பொதுச்சந்தை | 300.00 | 2000.00 | 35500.00 | - |
| 03 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 127500.00 | - |
| 04 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்திற்குச் சென்று ஆடுகள் வெட்டப்பட வேண்டும்.) | 300.00 | 2000.00 | 25000.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை. | 500.00 | 3000.00 | 7000.00 | - |
| 02 | ஏழாலைச் சந்தை. | 300.00 | 2000.00 | 14500.00 | - |

*வலிகாமம் தெற்கு பிரதேசசபை,*
*சுன்னாகம்,*
*31.10.2005*

திருமதி. ச. சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்குப் பிரதேசசபை.

(சி.13304)




பார்த்தால் கார் போ ந் தெரியும். ஆனால இது மூன்று சக்கர வாகனம். எல்லா சீதோஷ்ண நிலையிலும் மின்சாரத்தில் ஓடும் நவீன வாகனம் இது. ஜப்பானின் பிரபல 'ஷிரோவ்மா' நிறுவனம் இதை வடிவமைத்துள்ளது. இந்த மூன்று சக்கர வாகனம், ஜப்பானில் நடக்கும் சர்வதேச சைக்கிள் கண்காட்சி நிகழ்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. மொத்த எடை 50 கிலோகிராம்.

# பறவைக் காய்ச்சலை கட்டுப்படுத்த அமெரிக்கா 7.1 பில்லியன் உதவி

(வோஷிங்டன்)

ஆசியாவில் இருந்து ஐரோப்பியா வரை பரவியுள்ள பறவைக் காய்ச்சல் நோய்க்கான தடுப்பு மருந்தை கண்டு பிடிக்கும் முயற்சிக் கென அமெரிக்கா 7.1 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

பறவைக் காய்ச்சல் நோய் இப்போது உலகம் முழுவதும் பரவும் அபாயம் தென்படு கிறது. இந்த நிலைமை கட்டுப்படுத்தப்படல் வேண்டும். இதற்கென உலக நாடுகள் மும்முரமாகச் செயற்படுவது முக்கியமானதாகும் என அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித் துள்ளார்.

பறவைக் காய்ச்சல் நோய் இதுவரை அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் இந்த நோய் அமெரிக்காவிலும் பரவலாமென அமெரிக்க அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் இந்த நிதி ஒதுக்கீடு குறித்து உலக சுகாதார அமைப்புக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. இருப்பினும் இந்த முயற்சி ஐந்து வருடங்களுக்கு முன்பாகவே மேற்கொள் ளப்பட்டிருத்தல் வேண்டும் என அந்த அமைப் புக்கள் தெரிவித்துள்ளன.

## நெப்போலியனின் பல் ஏலம் விடப்படுகிறது

பிரான்ஸ் மன்னரான நெப்போலியனின் பல் ஏலம் விடப்பட இருக்கின்றது. இது ஆறு இலட் சம் ரூபாய்க்கு விலை போகலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

நெப்போலியன் செயிண்ட் ஹெலினா என் னும் பிரிட்டிஷ் காலனியின் கீழ் இருந்த தீவில் சிறை வைக்கப்பட்டபோது அந்தப்பல் அகற் றப்பட்டது. 1816ஆம் ஆண்டு நெப்போலியனுக்கு பல்வலி இருந்ததாக சரித் திரம் கூறுகிறது. அவரது பல்லை மருத்துவர் அகற்றி அவரது உதவியாளர் மசெரோனியிடம் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. மசெரோனி குடும்பத்திடம் இருந்து அந்தப்பல்லை 1956ஆம் ஆண்டு இப்போதுள்ள உரிமையாளர் வாங் கினார். அவர் இதை ஏலம்விட இருக்கிறார். எதிர்வரும் பத்தாம் திகதி ஏலம் விடப்படுகிறது.

# எல்லைத் தகராறு முற்றுகிறது: பெரு-சிலி நாடுகளிடையே போர் அபாயம்

(லிமா)

**பெரு-சிலி நாடுகளுக்கு இடையே கடல் எல்லைத்தகராறு பலமடைந்து வருகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் அதிகரித்து வருகிறது.**

லத்தீன் அமெரிக்க நாடுகளான பெரு மற்றும் சிலி நாடு களுக்கு இடையே நீண்ட நாட்களாகக் கடல் எல்லைத் தகராறு இருந்து வருகிறது. பசுபிக் கடல் உள்ள '37 ஆயிரத்து 900 சதுர கிலோமீற்றர் பரப்பளவுப்பகுதி இப்போது சிலிநாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. 1950 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தப்படி தான் இந்தப் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத் திருப்பதாகச் சிலிநாடு கூறுகிறது.

ஆனால் இந்தப்பகுதி இப்போது மீண்டும் தங்களுக்குச் சொந்தமாகிவிட்டது என்று பெருநாடு கூறுகிறது. இந்தக்கடல் பகுதியை மீட்க வேண்டும் என்று பெருநாட்டு பாராளுமன்றத் திலும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

எங்கள் உரிமையை விட்டுக்கொடுக்கமாட்டோம். இந்தத் தீர்மானம் சட்ட விரோதமானது என்று சிலி கூறுகிறது.

இந்தத் தகராறு காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே 19ஆம் நூற்றாண்டில் இருந்தே இருநாடு களுக்கும் இடையே எல்லைத் தகராறு இருந்து வருகிறது. 1879 முதல் 1883ஆம் ஆண்டு வரை நடந்த போரில் பெருநாட்டின் சில பகுதிகளை சிலி நாடு பிடித்துக் கொண்டது குறிப்பிடத் தக்கது.

தொழுகை



ரம்ழான் நோன்புக் காலம் முடிவடைவதை முன்னிட்டு சவுதியின் தலைநகர் ரியாத்தில் முஸ்லிம்கள் நேற்று முன்தினம் சிறப்புத் தொழுகை நடத்தினர்.

ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் தொழுகையில் பங்கேற்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

நெரிசல்



இஸ்லாமியர்களின் புனித ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு பங்களாதேஷ் முஸ்லிம்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குக் கிளம்பிச் செல்கின்றனர். தலைநகர் டாக்காவில் இருந்து செல்லும் புகையிரதங்களில் இடம் கிடைக்காமல், ஜன்னலிலும், கூரைகளிலும் தொற்றிக் கொண்டு செல்கின்றனர்.

# தீவிரவாதத்திற்கு எதிரான சட்டத்திற்கு பாராளுமன்ற ஒப்புதல் கிடைக்கவில்லை

## ரொனிபிளேயருக்கு பின்னடைவு

இங்கிலாந்து நாட்டில் தீவிரவாதத்துக்கு எதிராக கொண்டு வரப்படும் கடுமையான சட்டத் துக்குப் பாராளுமன்றத்தில் ஒப்புதல் கிடைக்க வில்லை. இதனால் பிரதமர் ரொனிபிளேயருக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டில் கடந்த யூலை மாதம் தீவிரவாதிகள் புகையிரத நிலையங்களிலும், பேருந்துகளிலும் குண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் 52 பேர் பலியானார்கள். இதைத் தொடர்ந்து தீவிரவாதத்துக்கு எதிரான சட்டத்தை கடுமை யாக்கும் முயற்சியில் ரொனி பிளேயர் அரசு ஈடுபட்டது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் கைதியை 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க வகை செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதற்கு பாராளுமன்றத் தில் அனுமதி வாங்குவதற்காக இந்தச் சட்டம் மீது விவாதம் நடந்தது.

அப்போது பிளேயரின் தொழிற் கட்சியைச் சேர்ந்த 34 பா.உ.க்கள் இந்தச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்கள் 28 நாள் காவல்போதும் என்று கூறினர். அவர்கள் எதிர்க்கட்சி பா.உ. களுடன் அரசாங்கம் கொண்டு வந்த சட்டத்தை தோற்கடிக்கும் முனைப்புடன் செயற்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, உள்துறை அமைச்சர் சார்ளஸ் கிளார்க் தோல்வியைத் தவிர்க்கும் வகையில், அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றார். எதிர்க்கட்சி பா.உ.க்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி புதிய சட்டம் கொண்டு வருவோம் என்று கூறியுள்ளார்.

# பிரான்சில் தொடரும் வன்முறை: 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிப்பு

(பரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பரிஸ் அருகே எட்டாவது நாளாக தொடரும் வன்முறைகளினால், அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன் 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் கலகக் காரர்களினால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளன.

வடஆபிரிக்கவை பிரஜா உரிமையாகக் கொண்ட முஸ்லிம் களே அதிகளவில் இவ் வன்முறையில் ஈடுபட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிசார் அவ்விடத்தில் குவிக்கப்பட்டுள்ளதாகவும், கலகக்காரர்கள் தொடர்ந்தும் வன்முறையில் ஈடுபட்டு வருவதாகவும், பொலிசார் தெரிவித் துள்ளனர். பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளதாக ஊடகம் ஒன்று தெரிவித் துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பரிசில் கடந்த வாரம் பொலிசார் துரத்திய போது இரண்டு ஆபிரிக்க இளைஞர்கள் விபத்துக்குள்ளாகி உயிரிழந்ததன் காரணமாகவே அங்கு வன்முறைகள் வெடித் துள்ளன.

# மாரடைப்புக்கு புதிய மருந்து தயாரிக்கப்பட்டது

மாரடைப்பு ஏற்பட்டு உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வைத்தியர்கள் புதிய மருந்து ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். இரத்தம் உறைவதைத் தடுக்கும் குளோபிடோ கிரல் என்ற மருந்தையும் ஆஸ்பிரின் மருந்தையும், ஒன்றாகச் சேர்த்து இந்தப் புதிய மருந்தை அவர்கள் தயாரித்துள்ள னர்.

46 ஆயிரம் பேருக்கு இந்த மருந்து வழங்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டுள் ளது. மாரடைப்பு ஏற்பட்டு உயிர் இழக் கும் அபாயத்தை இது ஏழு சதவீதம் குறைத்துள்ளது. ஆண்டு தோறும் ஒரு கோடி பேருக்கு மாரடைப்பு ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்கக் கண்ட நாடுகளின் சனாதிபதி மாநாடு

அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடு களின் சனாதிபதிகள் மாநாடு ஆர்ஜென்டீனா வில் நேற்று ஆரம்பமாகியது.

இதற்குமுன்னோடியாக அமெரிக்கக்கண் டத்திலுள்ள நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் நேற்று முன்தினம் ஆர்ஜென் டீனா வில் உள் விவகாரக் குழுவினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு ஆர்ஜென்டீனாவில் இரா ணுவ மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் 34 அமெரிக்கக் கண்ட நாடுகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக் கது.

இந்த மாநாட்டில் பல முக்கிய விடயங் கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.




இந்தச் துவிச்சக்கரவண்டி ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை மடித்த வைத்துக்கொள்ள முடியும். அடுத்த ஆண்டு இது விற்பனைக்கு வருகின்றது.

# சவளக்கடை கிராமத்தில் இருப்பிடங்களை இழந்தோருக்கு த.பு.கழகத்தினால் நிரந்தர வீடமைக்கும் திட்டம்

(அம்பாறை)

**நாவிதன் வெளிப்பிரதேசசெயலகப் பிரிவிலுள்ள சவளக்கடைக் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இருப்பிடங்களை இழந்து நலன்புரிநிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிரந்தர வீட்டுத்திட்டத்தை அமைக்கவுள்ளது.**

நாவிதன் வெளிப்பிரதேச செயலகத்திற்கு முன்னால் முகாமிட்டுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 150 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 200இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அரச காணிகளைப் பகிர்ந்தளிக்கப்பட்டு தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளன.

இப்பிரதேச காணிகளிலேயே ஒவ்வொன்றும் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைப்பதற்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை தற்பொழுது பெய்து வரும் மழையினால் தற்காலிகக் கொட்டகைகள் சிறுவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர் மழை தற்காலிகக் கொட்டில்களில் வதியும் மக்கள் அவலம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிகக் கொட்டில்களில் வதியும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சுனாமிப் பேரலை தாக்கி பத்து மாதம் கடந்துள்ள போதும் நிரந்தர வீடுகளை அமைப்பது சம்பந்தமாக அரசு எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை.

சனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்றதும் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு வீட்டு வசதி மற்றும் நிவாரண உதவிகளை வழங்கப் போவதாக வேட்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் தற்போது ஆட்சியிலுள்ளவர்கள் சுனாமிப் பொதுக் கட்டமைப்பினைக் கூட இரத்துச் செய்து விட்டனர் எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தற்போது பெய்யும் மழையினால் கூடாரங்களினூடாக நீர் கசிவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

# பதிவு செய்யப்பட்ட உந்துருளிகளுக்கான இலக்கத் தகடுகள்பலருக்குக் கிடைக்கவில்லை

## -உரிமையாளர்கள் விசனம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட உந்துருளிகளுக்கான இலக்கத்தகடுகள் பலருக்கு இன்னும் கிடைக்கப் பெறவில்லையெனத் தெரியவந்துள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையின் போது உந்துருளிகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் இதுவரை குறிப்பிட்ட ஒரு தொகுதி இலக்கத் தகடுகள் மாத்திரம் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப் பெற்று விநியோகிக்கப்பட்டுள்ள பொழுதிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பலருடைய உந்துருளிகளுக்கான இலக்கத் தகடுகள் செயலகத்திற்கு வந்து சேரவில்லையெனவும் இதன் காரணமாக இலக்கத்தகடுகள் அற்ற நிலையில் மேற்படி உந்துருளிகளை பிறமாவட்டங்களுக்கு பாவனைக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளதென இலக்கத் தகடுகள் கிடைக்கப் பெறாத உந்துருளி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (சோ)

# மனித நேய அமைப்பினால் வருமான அதிகரிப்பிற்கென ஏழு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி

(அலுவலகசெய்தியாளர்)

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பினால் அண்மையில் சமாதான அபிவிருத்தித்திட்ட இரண்டாம் கட்ட செயற்திட்ட வருமான அதிகரிப்பிற்கென ஏழு உள்ளூர் அரச



சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டன.கிளி.மாவட்ட அரசசார்பற்ற இணையங்களின் செயலகத்தில் வைத்து மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமான நிதி முகாமையாளர் முரளிதரன் நிறுவனங்களுக்கு காசோலைகளைக் கையளித்தார்.

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம், பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனம் கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஆகியவற்றிற்கே மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுவனதினூடாகவும் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பெற்று சுயதொழில் முயற்சிக்கென தலா 10,000 ரூபா வழங்கப்படவுள்ளதென நிறுவன நிதி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.(சோ)

# கிராம வீதிகள் திருத்தம்

(மல்லாவி)

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டாம் கட்டமாக கிராம வீதிகள் திருத்தம் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது கோட்டைகட்டிய குளம் சங்கக்கிளை வீதி திருநகர் இரண்டாம் குறுக்கு வீதியுடன் யோகபுரம் மத்தி பழைய முறிகண்டி மருதன குளம் ஐயங்கன்குளம் தேராங்கண்டல் வீதிகள் திருத்தப்படவுள்ளன. இதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.(24)

# முன்பள்ளிகளின் உதவிக்கல்விப் பணிப்பாளருக்கான பிரியாவிடை நிகழ்வும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கலும்

(வட்டக்கச்சி)

முன்பள்ளி நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவநாதனின் பிரியாவிடை நிகழ்வும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கலும் கடந்த மாதம் 25 ஆம் திகதி அன்று காலை 11.00 மணியளவில் கிளி.கிழக்குப் புனர்வாழ்வுப் பணிமனையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவநாதனும் முன்பள்ளி பெற்றோர் ஆசிரியத் சங்கத் தலைவர் சோதிநாதனும் வழங்கி வைத்தனர். இந் நிகழ்விற்கு கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட பணிப்பாளர் பூங்குன்றன், கிளி.கிழக்கு புனர்வாழ்வு உதவிப் பணிப்பாளர் நவனீதன்,முன்பள்ளி வலய இணைப்பாளர் றஜனி நிறுவன இணைப்பாளர் சிறிரஞ்சினி, முன்பள்ளி மேற்பார்வையாளர் கௌசலா ஆகியோருடன் முன்பள்ளிகளின் தலைவர், செயலாளர் பொருளாளர் ஆகியோரும் பல தரப்பட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (12)

# உந்துருளிகள் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயம்

வட்டக்கச்சி புதுப்பாலச்சந்தியில் இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இருவர் பலத்த காயமடைந்தனர். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சிப்பகுதியில் இருந்து வட்டக்கச்சி நோக்கி சென்று கொண்டிருந்த உந்துருளியும் சில்வா வீதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த உந்துருளியுமே நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இச்சம்பவத்தின் போது இரு உந்துருளிகளும் பலத்த சேதமடைந்ததுடன் பயணித்தவர்களும் படுகாயங்களுக்குள்ளானார்கள். இச்சம்பவத்தில் சில்வா வீதியைச் சேர்ந்த ராசன் (வயது-24) என்பவர் படுகாயமடைந்து கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மற்றவரான சின்னவன் (வயது-23பத்துவீட்டுத்திட்டம்), என்பவர் கிளி.மாவட்டவைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார். (12)

# வவுனியா வைத்தியசாலை விடுதிவளவில் திருட்டு ஒரேநாவில் மூன்று உந்துருளிகள் களவு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வைத்தியசாலையின் வைத்தியர்கள் விடுதிவளாகத்தில் வைத்து கடந்த வாரம் ஒரே இரவில் மூன்று உந்துருளிகள் களவு போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேற்படி வைத்தியசாலை வைத்தியர்கள் விடுதி வளாகத்தில வைத்து கீரோகொண்டா, பஜாஜ் ,யமகா ரக மூன்று உந்துருளிகள் களவாடிச் செல்லப்பட்ட பொழுதிலும் வைத்தியசாலை வளாகத்திற்கு சற்றுத் தொலைவாக கைவிடப்பட்ட நிலையில் ஒரு உந்துருளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் இரு உந்துருளிகளும் களவு போயுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மேற்படி விடயம் தொடர்பாக வைத்தியசாலை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை அதிகாரிகளுக்கு முறையிடப்பட்ட பொழுதிலும் இது விடயமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென வைத்தியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். உந்துருளிகள் களவாடப்பட்ட தினத்தின் மறுநாள் மேற்படி வைத்தியசாலை வளாகத்தில் வைத்து ஈருருளி ஒன்றும் களவு போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# லெப். சங்கீதாவின் ஆறாம் ஆண்டு நினைவு சங்கீதா முன்பள்ளியில் அனுஷ்டிப்பு

ஓயாத அலை-03 வெற்றிச்சமரின் போது கரிப்பட்ட முறிப்பில் வீரச்சாவடைந்த லெப்டினன் சங்கீதாவின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு உண்ணாப்புலவிலுள்ள லெப்டினன்சங்கீதா முன்பள்ளியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வானது இப்பிரதேச கிராமமக்களினால் நடத்தப்பட்டது. முல்லை.கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத் தலைவர் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை செய்தியாளர் சகிலா ஏற்ற, மாவீரர் சங்கீதாவின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரரின் தந்தையார் ஏற்ற, மலர் மாலையினை சங்கீதா முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவி அணிவிக்க, தொடர்ந்து அப்பிரதேச மக்கள், முன்பள்ளி மாணவர்கள் ஆகியோர் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் அப்பிரதேச மக்கள், கள்ளப்பாட்டு முகிலன் போசாக்கு பூங்கா முன்பள்ளி மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (20)

# உலக உணவுத்திட்ட அனுசரணையுடன் மக்களுக்கான குடிநீர்,மலசலகூடப் புனரமைப்புச் செயற்பாடுகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுகளான பூம்புகார்,பன்றிக்கெய்தகுளம் கிராமப் பகுதிகளில் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடன் கிணறு திருத்த வேலையும், புதிதாக மலசலகூடம் அமைக்கும் வேலையும் நடைபெற்று வருகின்றன. பூம்புகார் கிராமத்தில் 15 குடிநீர் கிணறுகள் திருத்தமும், பன்றிக்கெய்தகுளம் கிராமத்தில் 15 குடிநீர் கிணறுகள் திருத்தமும், 40 மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்றன.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் புளியங்குளம் பகுதியில் 15 குடிநீர் கிணறுகள் திருத்தமும், நெடுங்கேணி கோவிற் புளியங்குளம் கிராமத்தில் 15 குடிநீர் கிணறுகளும் திருத்தப்பட்டு வருகின்றன. கொல்லர் புளியங்குளம் கிராமத்தில் 55 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பூம்புகார் கிராமத்தில் வேலைத் திட்டங்களுக்கான முதற்கட்ட உணவுப்பொருட்கள் 25 வீதம் கடந்தமாதம் 24ஆம் திகதி அன்று வழங்கப்பட்டுள்ளன. ஒரு கிணறு திருத்த வேலைக்காக தலா 340 கூலியாட்களுக்கான கொடுப்பனவுத் தொகைக் கமைவாக உணவுப் பொருட்களும் மலசலகூடங்கள் அமைப்பதற்கு தலா 105 மனித நாட்களுக்குரிய உணவுப் பொருட்களும் செலவு செய்யப்படவுள்ளன.

துணுக்காய் பிரதான சாலையின் மல்லாவி மத்தியகல்லூரிக்கு அருகாமையில் அண்மையில் பெய்த கனமழையினால் மழைநீர் தேங்கி நிற்பதையும், மழைநீர் ஓடுவதற்கு வடிகால்கள் இல்லாததால் இதன் அருகில் மதகுகள் நீர் ஓட முடியாமல் அடைபட்ட நிலையில் இருப்பதையும் காண்கிறீர்கள். (படம்–க. அன்ரனி)



# ஜி.ரி.இசற் நிறுவன அனுசரணையுடன் 12 மீனவர்களுக்கு மீன்பிடிப்படகும், வெளியிணைப்பு இயந்திரமும் வழங்கல்

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் 12 மீனவர்களுக்கான படகும், வெளியிணைப்பு இயந்திரமும் வழங்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் வைத்து சமாசத் தலைவர் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (20)

# மிதிவெடிகள் அகற்றப்படாததால் பாணாவெட்டிக் கிராம விவசாயிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வலிகாமம் தென்மேற்கு பாணா வெட்டிக்கிராமத்தில் உள்ள விவசாய நிலங்களில் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் நீண்டகாலமாக அகற்றப்படாதிருப்பதினால் இங்கு விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.**

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பாணா வெட்டிக்கிராமத்தில் பொதுமக்கள் மீளக்குடியமர திரும்பி வருகின்ற நிலையிலும், இங்குள்ள விவசாய நிலங்களில் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் இன்னமும் அகற்றப்படவில்லை.

இதனால் இங்கிருக்கும் விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத நிலைமை இப்பகுதி கமக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை காரணமாக விவசாய குடும்பங்களை அதிகமாகக் கொண்ட பாணா வெட்டிக் கிராமத்தில் பொருளாதார நிலைமை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இங்கிருக்கும் விவசாய நிலங்களில் காணப்படும் வெடிபொருட்களின் அபாயத்தை போக்க உடன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அப்பகுதி விவசாயிகள் வலிகாமம் தென்மேற்கு, உதவி அரச அதிபரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (33)

# சட்டவைத்திய நிபுணர் இல்லாததால் மந்திகை வைத்தியசாலையில் நெருக்கடி

(வடமராட்சி)

யாழ். மந்திகை வைத்திய சாலையில் பணியாற்றுவதற்கென சட்டவைத்திய நிபுணர் எவரும் நியமிக்கப்படாததினால் மரண விசாரணைகளை மேற்கொள்வதில் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்கநேரிடுவதாக இவ்வைத்தியசாலையின் பொறுப்பாதிகாரி கதிரவேற்பிள்ளை தெரிவிக்கின்றார்.

மேற்படி வைத்தியசாலையில் சட்டவைத்திய நிபுணர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாகவே இருந்து வருகிறது. இதனால் இவ்வைத்தியசாலை நிர்வாகம் மரணவிசாரணைச் செயற்பாடுகளின் போது எதிர்கொள்ளும் பலவிதமான இடர்பாடுகளையும் சுட்டிக்காட்டி இங்கு ஓர் சட்ட வைத்திய நிபுணரை நியமிக்கக் கோரியும் அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை.

இந்த நிலைமை காரணமாக இவ்வைத்தியசாலையின் மரணவிசாரணைச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியே மரண விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதால் மரண விசாரணைகளின் போது கால தாமதங்கள் ஏற்படுவதாகவும் வைத்தியசாலை பொறுப்பதிகாரி கதிரவேற்பிள்ளை கூறினார். (33)

# வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் நூலகம் தேவை

## மாணவர்கள் கோரிக்கை

யாழ்.குடாநாடு மற்றும் வன்னிப்பிரதேச வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்கள் பயன்பெறக் கூடியவிதத்தில் நூலகங்களை அமைத்துத்தர வேண்டும் என்று யாழ்.மாவட்டத்தில் வெளிவாரியாக பட்டப்படிப்பை தொடர்ந்து வரும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த இலங்கை திறந்த பல்கலைகழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்த சந்தர்ப்பம் ஒன்றிலேயே யாழ். மாவட்ட மாணவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். யாழ். குடா நாட்டிலும், வன்னிபிரதேசங்களிலும் வெளிவாரியாகபட்டப்படிப்பை தொடரும் மாணவர்கள் பயன்பெறக்கூடிய விதத்திலான நூல்களைக் கொண்ட நூலகங்கள் எதுவும் இல்லாதுள்ளன.

இதனால் இப்பகுதி வெளிவாரி மாணவர்கள் தமது பாடவிதானம் சம்பந்தப்பட்ட நூல்களை பெற்றுக்கொள்வதிலும் அறிவுத்தேடலுக்கான உசாத்துணை நூல்களைப் பெற்றுக்கொள்வதிலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் பாடவிதானம் சம்பந்தப்பட்ட நூல்கள் சிலவற்றை இங்கு பெறமுடியாத நிலையும் உள்ளது.

இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டியே வெளிவாரி மாணவர்கள்பயன் பெறத்தக்க நூல் நிலையம் அமைக்கப்பட்டவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (33)-

# யாழ். மந்திகை வைத்தியசாலைக்கு இந்திய அரசால் ஐந்துகோடி ரூபா நிதியுதவி

(வடமராட்சி)

யாழ். மந்திகை வைத்தியசாலையின் வைத்தியசேவைத் தொழில் நுட்ப வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்தியஅரசாங்கம் ஐந்து கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ். மந்திகை வைத்தியசாலையில் காணப்படும் வைத்திய சேவைத்தொழில் நுட்ப வசதியீனங்களால் இங்குவைத்திய சேவைகளைப் பெறவரும் நோயாளர்களுக்கு திருப்திகரமான வைத்தியசேவைகளைவழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இங்குவரும் பல்லாயிரக்கணக்கான நோயாளர்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டி இவ்வைத்தியசாலைக்கு அண்மையில் வருகைதந்த இலங்கைக்கான இந்தியதூதுவர் நிருபமாராவிடம் மந்திகை வைத்தியசாலை நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைகளைத் தொடர்ந்தே இந்திய அரசு இவ் ஐந்துகோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதிமூலம் வைத்தியசாலையின் தேவைகளுக்கான வைத்தியதொழில்நுட்ப உபகரணங்கள்,இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று மந்திகை வைத்தியசாலை பொறுப்பதிகாரி கதிரவேற்பிள்ளை கூறினார். (33)

# யாழ்.குடாநாட்டில் பாத்தீனியம் விசச்செடி அழிக்க ஒதுக்கப்பட்ட நிதி போதாது

## -யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பாத்தீனியம் விசச்செடிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி அந்நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் போதாதுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களப்பணிப்பாளர் கூறியுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் பருவமழை தற்பொழுது ஆரம்பித்திருப்பதன் காரணமாக இங்குள்ள விவசாய நிலங்களில் பாத்தீனிய விசச்செடி முளைவிட ஆரம்பித்திருப்பதுடன் மழை வெள்ளத்தினால் இச் செடி விரைவாகப் பரம்பலடையவும் அதிக வாய்ப்புள்ளது.

எனவே இந்நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவேண்டிய பாத்தீனிய விசச்செடி ஒழிப்பு நடவடிக்கைகளுக்குரிய நாசினிகளைக் கொள்வனவு செய்வதற்குப் பல இலட்சம் ரூபா நிதி தேவைப்படுகிறது.

எனினும் இந்த வருடம் மேற்கொள்ளப்படவேண்டிய பாத்தீனிய விசச்செடி ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் 30 ஆயிரம் ரூபா நிதியை மட்டுமே விவசாயத்திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது.

இதனால் பாத்தீனிய விசச்செடி ஒழிப்பு நடவடிக்கைகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதாகவும் விவசாயத் திணைக்களப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# சனாதிபதித் தேர்தலை பகிஸ்கரிப்போம் வலிகாமம் பொது அமைப்புக்களின் ஒன்றியம்

சிங்களத் தேசத்திற்கான பேரினவாதத் தலைவர் ஒருவரைத் தேர்வு செய்யும் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் கட்டாயம் பங்களிக்க வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் கடந்தகால வரலாற்றைத் தெரியாதவர்களாகும். அதனை சரியாகத் தெரிந்தவர்கள் தமிழ் பேசும் மக்கள் தேர்தலில் வாக்களிக்காது விடுவதே புத்தி சாதுரியம் என ஏற்றுக்கொள்வர். இவ்வாறு வலிகாமம் கோட்டப் பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இன்று தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர் இருவருமே சிங்களப் பேரினவாதச் சிந்தனை கொண்டவர்களாகவே தம்மை இனம் காட்டியுள்ளனர்.

அதனையே தமது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், சிந்தனைகளிலும் வெளிக்காட்டியுள்ளனர். தவிர தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு தெளிவான தீர்வை முன்வைக்கவுமில்லை, அதற்கு ஒத்திசைவான விடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டவுமில்லை. தமிழர்களுடைய பிரச்சினையைத் தமது வெற்றிக்குப் பயன்படுத்தும் கருவியாக முன்வைத்து பொருத்தமற்ற கருத்துக்களை கூறிவருகின்றனர். இப்படியான பசப்புவார்த்தைகளைக் கேட்டு இனியும் எமது மக்கள் ஏமாற மாட்டார்கள். தமக்கான ஒரு தனி அரசை அமைக்க அதற்காக உழைத்தும் வருகிறார்கள்.

ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிட்டாலும் எம்மைத் துன்புறுத்தும், அழிக்கும், அவசரகாலச்சட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதன் மூலம் இவர்களின் சுயரூபத்தை நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

இத்தேர்தலை ஆதரிப்பதால் எமக்கு எதுவிதபயனும் ஏற்படப்போவதில்லை. இத்தேர்தலைப் பகிஸ்கரிப்பதன் மூலம் சிங்களத் தலைமைகள் மீது நாம் கொண்டுள்ள அவநம்பிக்கையைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்த முடியும். எனவே தான் இந்த சனாதிபதித் தேர்தலை தமிழ் பேசும் மக்கள் புறக்கணித்து எமது விடுதலைக்கு உரம் சேர்த்துக் கொள்ள உதவும் படி கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கீ)

# யாழ். கல்வியற்துறையின் வெள்ளிவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியற்துறையின் வெள்ளி விழா நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாபதி கலையரங்கில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் கலந்துகொள்கின்றார். கல்வியற்துறை தலைவர் மா. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் இரா சிவச்சந்திரன் (கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்) பேராசிரியர் கே. கந்தசாமி (பட்டப்படிப்புகள் பீடாதிபதி யாழ்பல்கலைக்கழகம்) பேராசிரியர் இ. குமாரவடிவேல் (விஞ்ஞான பீடாதிபதி யாழ். பலகலைக்கழகம்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# காலபோக நெற்செய்கை பாதிப்பு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தில் 2005-2006 காலபோக நெற்செய்கை கடந்த சில நாட்களாகப் பெய்து வரும்கடும் மழை காரணமாக பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. முரசுமோட்டை, கண்டாவளை, தர்மபுரம், புளியம்பொக்கணை ஆகிய இடங்களே பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வயல்களில் விதைத்த நெல் பயிரான நிலையிலும் முளைக்காத நிலையிலும், நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. தொடர்ந்து விதைக்க வேண்டிய வயல்கள் கூட விதைப்பினை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகள் பெரும் நட்டமடைந்துள்ளனர் சிறுபோக நெற்செய்கை விளைவித்த நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் மிகவும் குறைந்த விலைக்கே அதாவது 750 ரூபாவுக்கு 1 மூடை நெல் கொள்வனவு செய்யப்படுவதால் நெற்செய்கையில் முதலிட்ட பணத்தைக் கூட மீள பெறமுடியாது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில் கடும் மழை காரணமாகத் தற்பொழுதும் காலபோக நெற்செய்கை பாதிப்படைந்ததையிட்டு பெரும் கவலையடைந்துள்ளனர். நெல்லின் விலைவீழ்ச்சியையும் அதிகரித்த கூலியாட்களின் சம்பளத்தையும் கருத்தில் கொண்டு இம்முறை சுமார் அறுபது வீதமான வயல்களே செய்கை பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

# முள்ளிக்குள கிராமத்தில் ஆறாயிரம் பனம்விதை நடுகைத்திட்டம்

மன்னார் மாவட்டத்திலுள்ள மடுப் பிரதேசத்தில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் 6000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மடுப்பிரதேச இணைப்பாளர் தலைமையில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் தேசியக் கொடியை முள்ளிக்குளம் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஏற்றினார்.இந் நிகழ்வில் முதலாவது பனம் விதையை முள்ளிக்குளம் த.பு.க வீட்டுத்திட்ட இணைப்பாளர் நாட்டினார். இந் நிகழ்வில் முள்ளிக்குள வாழ் மக்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பெருமளவானோர்கலந்துசிறப்பித்தனர். (கு)

# பாதிக்கப்பட்ட மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு உலக தரிசன நிறுவனத்தால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்


(மட்டக்களப்பு)

உலக தரிசன நிறுவன (வேள்ட் விசன்) த்தால் நேற்று முன்தினம் பட்டிருப்பு தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு தொகையான மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பட்டிப்பளை வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி பிர தேசங்களில் பணிபுரியும் தமது பணியாளர்களுக்கும்100துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

இதுவரையில் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் வேள்ட்விசன் நிறுவனத்தால், பத்தாயிரம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் வடகிழக்கு மாகாண நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.சுதர்சனன் தெரிவித்தார். இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசத்திலுள்ள சமுத்திரபுரக் கிராமத்தில் வேள்ட்விசன் நிறுவனத்தினால் சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்கா அமைக்கும் பணிகள் சிறுவர் நலன் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி அருண் ஆரோக்கியநாதன் தலைமையின் கீழ் நடைபெற்று வருகின்றது.

# அறிவியல் அறிஞர் ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்

அறிவியல் அறிஞர் ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன் தமது சார்புக் கோட்பாட்டை உருவாக்கிய நூற்றாண்டு இது. காலமும் நேரமும் தனித்து இயங்கக் கூடியதல்ல. ஒன்றை ஒன்று சார்ந்திருக்கக் கூடியது என்று கூறும் சார்புக் கோட்பாட்டைக் கண்டுபிடித்து E=mc2 என்ற புகழ்மிக்க சூத்திரத்தை உருவாக்கினார். அணுகுண்டுத் தயாரிப்புக்கு இந்தச் சூத்திரம் அடிப்படையாக அமைந்தது. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் முதலாவது அணுகுண்டை அமெரிக்கா வீசியபோது சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள்



உயிரிழந்தனர். மூன்று நாட்கள் கழித்து நாகசாகி நகரில் இன்னொரு அணு குண்டு வீசப்பட்டதில் 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். அதன் பிறகு ஆறு நாட்கள் கழித்து ஜப்பானியப் பேரரசர் ஹிரோஹித்தோ ஜப்பான் சரணடைவதாக வானொலியில் அறிவித்தார். அன்றில் இருந்து அணு ஆயுதங்களுக்கு எதிரான இயக்கத்தை ஜப்பான் நடத்தி வருகின்றது.

மனித குலத்தைப் பதைபதைக்கச் செய்த இந்தக் கொடூரமான அணுகுண்டுத் தாக்குதலைக் கண்டித்து செயிஷினோஹரா என்ற தத்துவஞானி அணு குண்டின் தந்தை எனப்படும் ஆல்பேர்ட் ஐன்ஸ்டீனுக்கு கடிதம் எழுதினார். ஆயுளின் அந்திமக் கட்டத்தில் இருந்த ஐன்ஸ்டீன் இந்தக் கண்டனக் கடிதத்திற்கு தமது கைப்பட வே ஒரு பதில் கடிதம் எழுதினார். ஜப்பான் மீது அணுகுண்டு போட்டதை நான் எப்போதுமே கண்டித்து வந்திருக்கிறேன். ஆனால் அந்த அபாயகரமான முடிவு எடுக்கப்படுவதைத் தடுக்க என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை என்று 1953 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி செயிஷினோஹராவுக்கு எழுதிய கடிதத்தில் ஐன்ஸ்டீன் குறிப்பிட்டார். இந்தக் கடிதத் தொடர்பு இருவருக்கும் இடையில் தொடர்ந்தது. அணு குண்டுகள் உருவாக்கப்பட்டதில் எனக்கு ஆறுதல் தரும் ஒரேவிடயம் என்னவென்றால் இப்போது அவற்றின் அச்சுறுத்தல் என்றென்றும் இருக்கும். இந்தப் பயத்தினால் அணுகுண்டுக்கு எதிராக சர்வதேச பாதுகாப்பு முறை விரைவில் உருவாகும் என்று இன்னொரு கடிதத்தில் ஐன்ஸ்டீன் கூறினார்.

அணு குண்டு வீசப்படுவதைத் தடுக்க முடியாமல் தவித்த சமாதானப் பிரியரான ஐன்ஸ்டீன் ஒரு சமயத்தில் போருக்கும் வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார். யூத வம்சாவழியில் வந்த ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன் 1933 இல் ஹிட்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானதும் அமெரிக்காவுக்குத் தப்பி ஓடினார். அப்போது நாஜி ஜேர்மனிக்கு எதிராக படைப்பலம் பயன்படுத்தப்பட்டதை நியாயப்படுத்தி ஒரு கடிதத்தில் ஐன்ஸ்டீன் எழுதியுள்ளார். நான் ஒரு முழுமையான சமாதான வாதி அல்ல. ஆனாலும் சமாதானம் தான் தேவை என்று நான் நம்புகின்றேன் அதாவது படைப்பலத்தைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைகளும் உள்ளன. என்னையும் எனது மக்களையும் ஒழித்துக் கட்டுவதை மட்டுமே ஒரே குறிக்கோளாகக் கொண்ட எதிரி எனக்கு முன்னால் வரும் போது படைப்பலத்தைப் பயன்படுத்தியே தீரவேண்டும் என்று ஐன்ஸ்டீன் எழுதினார்.

1954 ஆம் ஆண்டு ஜூலை வரை ஐன்ஸ்டீனுக்கும் ஷினோஹராவுக்கும் இடையே கடிதத் தொடர்பு நீடித்தது. கண்டனக் கடிதத்தில் தொடங்கி நட்புறவு மலர்ந்தது. எனது கணவர் கோபத்தோடு எழுதிய கடிதத்திற்கு ஐன்ஸ்டீன் எரிச்சலுடன் பதிலளித்தார். பின்னர் கடிதத் தொடர்பு மூலம் இருவரும் நண்பர்களானார்கள் என்கிறார் ஷினோஹராவின் மனைவி. இந்தக் கடிதங்களை அருங்காட்சியகத்தில் வைக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

# கொழுப்பைக் குறைக்க புதிய முறையில் சிகிச்சை

உடல் பருமனைக் குறைக்க உடற்பயிற்சி செய்யவேண்டும். அல்லது உணவில் கட்டுப்பாடாக இருக்கவேண்டும். சில சமயம் இரண்டையும் சேர்த்து செய்ய வேண்டும். இதுதவிர பிரத்தியேக அறுவைச் சிகிச்சை மூலம் பருமனைக் குறைக்கும் சிகிச்சையும் வந்துள்ளது. ஆனால் எதுவுமே வேண்டாம் கொழுப்பை குறைக்கலாம் என்று லண்டன் மருத்துவ நிபுணர் கிறிஸ்இங்க்லேபீல்டு கூறியுள்ளார்.

இவரது புதிய சிகிச்சையில் சத்திர சிகிச்சைக்கூடம் இல்லை, வலி இல்லை, மருந்து மாத்திரை பத்தியம் எதுவுமே இல்லை அதற்குப் பதில் ஒரு நவீன இயந்திரத்தை பயன்படுத்துகிறார். உடலில் வேண்டாத கொழுப்பு தேங்கிக் கிடக்கும் இடத்தின் மீது இந்தக் கருவி உயர் அதிர்வலை எண்ணுடைய அல்ட்ராசவுண்ட் அலைகளைப் பாய்ச்சும். இதன் மூலம் அருகில் உள்ள இரத்த நாளங்கள், தோல், தசை, எலும்பு மற்றும் நரம்புகளுக்கு எந்தவிதமான சேதாரமும் இல்லாமல் கொழுப்புக் கலங்கள் உடைக்கப்படும் பின்னர் இப்படி உடைக்கப்பட்ட கொழுப்பு கலங்களை நோயாளியின் வெள்ளை இரத்த கலங்கள் ஈர்த்து பின்னர் உடம்பினால் எரிக்கப்படுகின்றன.

இவர் இந்த நவீன கருவியைப் பயன்படுத்தி இதுவரை 20 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளார். சிகிச்சைக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே தேவைப்பட்டது. சிகிச்சைக்கான செலவு 800 பவுண்டுகள் மட்டுமே. அதாவது ஒரு இலட்சத்தி 44 அயிரம் ரூபா. இந்தக்கருவி அடுத்தடுத்த ஆய்வுகளுக்குப் பின் வெகு சீக்கிரத்தில் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கண்ணி வெடியை கண்டுபிடிக்கும் காலணி

கண்ணி வெடிகள் மிகவும் ஆபத்தானவை உலகில் 22 நிமிடத்துக்கு ஒரு முறை ஏதாவது ஒரு பகுதியில் ஒருவர் வீதம் கண்ணி வெடிக்கு உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் சொல்கின்றன. இதனால் ஆப்கானிஸ்தான், கம்போடியா, முன்னாள் யூகோஸ்லோவேக்கியா அங்கோலா, மொசாம்பிக், உட்பட பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான் வசித்து வருகின்றார்கள்.

இந்நிலையில் கண்ணிவெடியில் இருந்து உயிரைக்காக்கும் ஆறு கால்கள் கொண்ட நவீன காலணியை சிங்கப்பூரில் உள்ள நான்யாங் தொழில் நுட்ப பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ளது. இந்தக் கருவியை காலணியோடு சேர்த்து பொருத்திக் கொள்ள வேண்டும். இதில் இருக்கும் ஒவ்வொரு காலிலும் கண்ணிவெடியைக் கண்டுபிடிக்கும் உணர்வுக் கருவிகள் இணைக்கப்பட்டு இருப்பதால் கண்ணி வெடியைக்கண்டுபிடித்து எச்சரிக்கை விடுக்கும். இதன் மூலம் உயிரையும் கால்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.


தற்போது இந்த புதிய காலணிக்கு காப்புரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை மூன்று ஆண்டுக்கு முன்பு ஜப்பான் பொம்மைகள் தயாரிப்பு நிறுவனம் நவீன தொழில் நுட்ப முறையில் ஒரு அரிய கருவியைக் தயாரித்தது. இதன் மூலம் நாய்களின் முனகல் சத்தம், சிறு சிறு ஒலி வகைகள், முகம் மற்றும் உடல் அசைவுகள் ஆகியவற்றுக்கு என்ன அர்த்தம் என்று கண்டறிய முடியும். இப்போது இதே போல் ஜப்பான் நிறுவனமொன்று பச்சிளம் குழந்தைகளின் பலவித அழுகைகள் சத்தங்கள், ஒலி வகைகள் முகம் கை, கால் அசைவுகள் மற்றும் உடல் சீதோஷ்ண நிலை மாறுபாடுகள் மூலம் குழந்தைகளின் விருப்பங்கள் மனவோட்டங்கள் ஆகியவைகளை அறிந்து விளக்க சில நவீன கருவிகளைத் தயாரித்து வருகிறது உதாரணமாக குழந்தை கண் இமை அசைவுகள் அதன் மூக்கின் நுனியில் இருந்து கண் இமை நெளிவு சுழிவுகள் எவ்வளவு நெருங்கி அல்லது விலகியுள்ளன. குழந்தை முகத்தில் உடல் உஷ்ண மாறுபாட்டுக்குத் தகுந்தபடி எவ்வாறு நிறம் மாறுகிறது. அதன் பொருள் என்ன என்பனவற்றை நமக்கு உணர்த்த இந்த நவீன கருவிகளால் முடியும். இன்னும் சில காலத்தில் இந்தக் கருவிகள் சந்தையில் விற்பனைக்கு வந்து விடும் என்று கூறப்படுகிறது.

# வெட்ட வெட்ட உருவாகும் உறுப்பு விஞ்ஞானிகளின் அரிய கண்டுபிடிப்பு

மறு அவதாரம் எடுக்கக் கூடிய அற்புத எலியொன்றை உருவாக்கியுள்ளனர் அமெரிக்க அறிவியல் அறிஞர்கள்.

துண்டிக்கப்பட்ட உறுப்புகள் மீண்டும் வளர்ச்சியடையக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட அறிவியலின் மற்றுமொரு முன்னேற்றமான இந்த எலியை அமெரிக்க உயிரி மருத்துவ ஆராய்ச்சி மைய அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த எலியின் வாலை வெட்டினால் அது மீண்டும் வளர்கின்றது, காலை வெட்டினால் அது மூட்டோடு சேர்ந்து வளர்கிறது இதயத்தை இயங்கவிடாமல் உறைய வைத்தால் அது மீண்டும் துடிக்க



ஆரம்பிக்கிறது.

இந்த அற்புத எலி குறித்து உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் அமைந்துள்ள விஸ்டார் ஆய்வுக் கழகத்தின் நோய்த் தடுப்புத்துறை பேராசிரியர் எல்லென் ஹிபர் காட்ஸ் என்பவர்கருத்துத் தெரிவிக்கையில்; ஒருநாள் மனிதர்களுக்கும் உடல் உறுப்புக்கள் மீண்டும் வளரக்கூடிய ஆற்றலை வழங்க முடியும் என்ற நம்பிக் கை இந்த ஆய்வின் மூலம் எமக்கு பிறந்துள்ளது.

பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட எலியின் கருவில் உள்ள ஈரல் கலம் என்பவற்றை சாதாரண எலியின் உடம்புக்குள் ஊசி மூலம் செலுத்தும் போது அந்த சாதாரண எலியின் உடல் உறுப்புகளும் மீண்டும் வளரும் ஆற்றலைப் பெற்றுவிடும் என்பது ஆய்வுகளின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உறுப்புக்கள் மீண்டும் வளரும் செயற்பாடுடைய சுமார் ஒரு டசின் மரபணு மனிதனிடத்திலும் காணப்படுகின்றன. ஆனாலும் இது தொடர்பான ஆய்வுகள் இன்றும் முழுமை பெறவில்லை. இந்த எலியின் காதுகள், கால்கள் போன்ற உறுப்புக்களை துண்டித்தும் சேதப்படுத்தியும் பார்த்தோம் அவை மீண்டும் வளர்ந்தன.

அதன் கருக்கலங்களை ஊசி மூலமாக இன்னுமொரு எலியின் உடம்பினுள் செலுத்தி பரிசோதனை செய்தபோது அந்த எலியின் உறுப்புகளுக்கு மீண்டும் வளரும் ஆற்றல் ஆறு மாதங்களுக்கு நீடித்தது. பரிசோதனைக்கு வளரும் எலியின் காதில் அடையாளத்திற்காகப் போடப்படும் சிறுதுளையும் தழும்புகூட இன்றி விரைவில் ஆறிவிடுகின்றன.

இதற்குக் காரணம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தானாகக் குணமாகும் திறன் பெற்ற எலி எம்.ஆர். எல் என்ற மரபு வழியில் வந்ததே என்று அவர் கூறினார்.

அத்துடன் இத்தகைய எலிகளிடம் கலப் பகுப்பு அதிக வேகத்தில் நடைபெறுகின்றது. அதனுடைய கலங்கள் வேகமாக மடிந்து அதேவேகத்தில் மீண்டும் வளர்கின்றன. எனவே தான் இந்த எலிகளுக்கு மீண்டும் வளரும் திறன் கிடைக்கிறது.

ஒரு எலியின் சராசரி ஆயுள் இரண்டு ஆண்டுகள் இப்போது பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட எலிக்கு 18 மாதங்களேயாகின்றன. இந்த எலிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் உயிர் வாழுமானால் இதே மரபணுக்கள் நீண்ட ஆயுளையும் தரக்கூடிய ஆற்றல் பெற்றவை என்று அறியமுடியும் என்றும் அவர் கூறினார்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

யா/க/4501 திரு. வேலுப்பிள்ளை சபாபதி
யா/க/4529 திருமதி. சரஸ்வதி தியாகராசா
யா/க/4538 திருமதி. பத்தினிப்பிள்ளை வல்லிபுரம
யா/க/4545 திரு. காக்கையர் சின்னப்பு
யா/க/4574 திருமதி. கற்பகம் தம்பையா
யா/க/4578 திருமதி. மங்கையற்கரசி சின்னத்துரை
யா/க/ 4624 திரு.தாமோதரம்பிள்ளைசங்கரப்பிள்ளை
யா/க/ 4640 திரு. கணபதிப்பிள்ளை கணேசன்
யா/க/4666 திரு.ஆழ்வார் இரத்தினம்
யா/க/4694 திரு.கிட்டிணர் கோபாலன்
யா/க/4717 திரு.சண்முகம் சோமசுந்தரம்
யா/க/ 4733 திரு.கணபதிப்பிள்ளை ஆறுமுகம்
யா/க/4753 திரு.கிருஷ்ணபிள்ளைபாலசுப்பிரமணியம்
யா/க/4763 திரு. வைரமுத்து கந்தசாமி
யா/க/ 4803 திரு. செல்லன் பெருமாள்
யா/க/4832 திருமதி. தெய்வானை பாலசிங்கம்
யா/க/4839 திருமதி. சுந்தரேஸ்வரி செலவலிங்கம்
யா/க/ 4843 திரு. வேலுப்பிள்ளை நடராசா
யா/க/4852 திரு. முருகன் சந்நிதி
யா/க/4859 திருமதி. எலிசபேத் சூசைப்பிள்ளை
யா/க/4870 திரு. கந்தையா குகனேஸ்வரன்
யா/க/4882 திரு. வல்லிபுரம் தர்மலிங்கம்
யா/க/ 4893 திரு. நடராசா கயிலாயர்
யா/க/4894 திரு. கந்தையா பழனிப்பிள்ளை
யா/க/4922 திரு. பொண்ணு கந்தசாமி
யா/க/ 4941 திரு. செல்லன் சின்னத்துரை
யா/க/4945 திரு. வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/க/4972 திரு. நடராசா சிவஞானம்
யா/க/4985 திருமதி. சிவக்கொழுந்து சுப்பிரமணியம்
261யா/க/4997திருமதி. சின்னக்கண்டுபழனி
யா/க/5046 திரு.சுப்பர்சின்னமணி
யா/க/5058திருமதி.தங்கைச்சிப்பிள்ளைசின்னத்துரை
யா/க/5081 திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை
யா/க/5100 திருமதி. இராஜேஸ்வரி கனகரட்டினம்
யா/க/ 5137 திரு. மைக்கல்ஜோசப் ஆசீர்வாதம்
யா/க/5159 திருமதி. மீனாட்சி கந்தன்
யா/க/5171 திருமதி. பத்தினி தங்கராசா
யா/க/5189 திரு. சின்னத்தம்பி சண்முகதாஸ்
யா/க/ 5193 திரு. பொன்னையா சுப்பிரமணியம்
யா/க/5199 திருமதி. தங்கம்மா கந்தையா
யா/க/5212 திருமதி. கனகம்மா நவரட்ணம்
யா/க/5231 திரு. வேலு கிருஸ்னன்
யா/க/5233 திரு. கார்த்திகேசு கந்தசாமி
யா/க/ 5276 திரு. சிங்காரவேலு நாராயணசாமி
யா/க/5291 திருமதி. லீலாவதி சிவக்கொழுந்து
யா/க/5297 திரு. நாகலிங்கம் இராஜராஜன்
யா/க/5359 திருமதி. பொன்னம்மா சின்னத்துரை
யா/க/ 5375 திரு. நித்சிங்கம் குருகுலசிங்கம்
யா/க/5391 திருமதி.மீனாம்பிகை தாமோதரம்பிள்ளை
யா/க/5397 திருமதி. பாக்கியம் கந்தசாமி
யா/க/5435 திருமதி.சின்னத்தங்கம் கிருஷ்ணபிள்ளை
யா/க/5487 திருமதி. யோகம்மா நல்லதம்பி
யா/க/5489 திரு. சின்னத்தம்பி கற்கண்டு
யா/க/ 5500 திரு. மாணிக்கன் சிங்கன்
யா/க/ 5501 திரு. பாலன் சின்னத்தம்பி
யா/க/5502 திரு. ஜோர்ஜஅரியராசா அரியநாயகம்
யா/க/5525 திருமதி. செல்வி மாணிக்கம்
யா/க/5550 திரு. ஆழ்வான் சின்னத்துரை
யா/க/5554 திருமதி. கனகம்மா திருநாவுக்கரசு
யா/க/5563 திருமதி. சரஸ்வதி சிறீஸ்கந்தராஜா
யா/க/5569 திரு. கந்தையா முருகேசு
யா/க/5591 திரு. நமசிவாயம் பாலசுப்பிரமணியம்
யா/க/5650 திரு. நமசிவாயம் தங்கராசா
யா/க/ 5663 திரு.ஆழ்வாப்பிள்ளை இராமநாதன்
யா/க/5685 திரு. இராமலிங்கம் செல்லத்துரை
யா/க/ 5699 திரு. நல்லான் கந்தப்பு
யா/க/5708 திருமதி. நவமணி கார்த்திகேசு
யா/க/5749 திருமதி. செல்லம்மா சின்னத்தம்பி
யா/க/5793 திருமதி. சிவகாமி நல்லதம்பி
யா/க/5867 திரு. சின்னையா கணேசன்
யா/க/5893 திரு. வேலுப்பிள்ளை மாணிக்கம்
யா/க/ 5903 திருமதி. கனகம்மா செல்லையா
யா/க/5925 திருமதி. கோகனதம்மா கதிர்காமத்தம்பி
யா/க/5947 திரு. சண்முகம் சிவபாதசுப்பிரமணியம்
யா/க/5960 திருமதி.சிவபாக்கியம் திருநாவுக்கரசு
யா/க/5962 திருமதி. பாக்கியம் கார்த்திகேசு
யா/க/5991 திருமதி. தங்கம்மா சுந்தரலிங்கம்
யா/க/6016 திரு. சிவப்பிரகாசம் இராசரத்தினம்
யா/க/6017 திருமதி. நேசம்மா தவபுத்திரன்
யா/க/6031 திரு. கணபதி துரைகிளி
யா/க/ 6047 திருமதி.அன்னம்மா வைத்திலிங்கம்
யா/க/6058 திரு.சின்னையா சிவராசா
யா/க/ 6079 திரு.கணபதி வேலுப்பிள்ளை
யா/க/6081 திருமதி. யோகம்மாள் சேனாதிராசா
யா/க/ 6153 திரு.ஆறுமுகம் தங்கவேலு
யா/க/ 6160 திருமதி. சரஸ்வதி வேலுப்பிள்ளை
யா/க/6170 திருமதி.கதிராசிப்பிள்ளைசின்னத்துரை
யா/க/ 6179 திருமதி. செல்லம்மா கந்தையா
யா/க/ 6234 திரு. சின்னத்தம்பி மார்க்கண்டு
யா/க/6257 திருமதி. சரஸ்வதி கந்தப்பு
யா/க/ 6281 திருமதி. மாணிக்கம் சின்னத்தம்பி
யா/க/ 6284 திரு. விசுவநாதன் கதிரவேற்பிள்ளை
யா/க/ 6336 திருமதி. செல்லம்மா சுப்பிரமணியம்
யா/க/ 6353 திருமதி.அருந்தவநாயகிதங்கவடிவேல்
யா/க/ 6358 திரு. சின்னத்துரை கந்தசாமி
யா/க/ 6383 திருமதி. இலட்சுமியம்மா தம்பையா
யா/க/ 6407 திரு. நடராசா விவேகானந்தம்
யா/க/ 6408 திருமதி. நாகரத்தினம் இராமலிங்கம்
யா/க/ 6422 திருமதி. மீனாட்சியம்மா சாம்பசிவம்
யா/க/6429 திரு. மாணிக்கம் வல்லிபுரம்
யா/க/ 6446 திரு. அம்பலவன் காசியன்
யா/க/ 6468 திருமதி. இராசபூபதி செல்லத்துரை
யா/க/ 6501 திருமதி. இலச்சுமி நல்லவன்
யா/க/ 6511 திரு. கதிரவேலு சபாரத்தினம்
யா/க/ 6547 திருமதி. இரத்தினம் கணபதிபபிள்ளை
யா/க/ 6555 திரு. சபாபதி துரைராசா
யா/க/ 6597 திருமதி. சிவக்கொழுந்து முருகேசு
யா/க/ 6619 திருமதி. வயிரமணி தம்பிமுத்து
யா/க/6651 திருமதி. செல்லம்மா செல்லையா
யா/க/ 6746 திருமதி. மகேஸ்வரி கந்தசாமி
யா/க/6810 திருமதி. சொர்ணபூபதி இராவணேஸ்வரன்
யா/க/6820 திருமதி. சரஸ்வதி கந்தசாமி
யா/க/ 6832 திருமதி. சகுந்தலாதேவி கந்தவனம்
யா/க/ 6849 திரு.தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம்
யா/க/ 6856 திருமதி. நாகரத்தினம் வல்லியப்பு
யா/க/6863 திரு. முருகேசு நடராசா
யா/க/ 6875 திரு. சின்னத்துரை விசுவலிங்கம்
யா/க/ 6878 திருமதி. சபாரத்தினம் சரஸ்வதி
யா/க/ 6895 திரு. கணபதி மாணிக்கன்
யா/க/ 6906 திருமதி. அன்னம்மா முத்துசாமி
யா/க/6986 திரு. முருகேசு திருநாவுக்கரசு
யா/க/ 7003 திருமதி. மகேஸ்வரி இராசையா
யா/க/ 7043 திருமதி. நாகம்மா சிவஞானம்
யா/க/ 7097 திருமதி. சரஸ்வதி கந்தசாமி
யா/க/ 7190 திருமதி. செல்லம்மா வல்லி
யா/க/ 7198 திரு. சீனியர் துரைசிங்கம்
யா/க/ 7259 திரு. கதிரன் கந்தப்பு
யா/க/ 7288 திருமதி. முத்தம்மா நவசிவாயம்
யா/க/ 7310 திருமதி. சிவசக்தி மார்க்கண்டு
யா/க/7384 திரு. சுப்பிரமணியம் நாகேந்தரம்
யா/க/ 7407 திரு. கந்தன் திருநாவுக்கரசு
யா/க/ 7447 திரு. இளையதம்பி நல்லையா
யா/க/ 7505 திரு. சின்னையா பாலகிருஷ்ணன்
யா/க/ 7535 திருமதி. புவனேஸ்வரி நாகேந்திரம்
யா/க/ 7563 திருமதி. குண்டம்மா சோமசுந்தரம்
யா/க/ 7564 திருமதி. கனகம்மா சின்னத்தம்பி
யா/க/7566 திருமதி. பூமணி அண்ணாச்சாமி
யா/க/ 7585 திருமதி. கனகம்மா திருஞானம்
யா/க/7703 திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு
யா/க/7713 திருமதி. அன்னம்மா ஆனந்தமயில்
யா/க/7747 திரு. சுப்பர் கந்தசாமி
யா/க/ 7805 திருமதி. ஆசை பொன்னன்
யா/க/ 7826 திரு.கிறீஸ்தோப்பர்றேமன்சலேசியஸ்
யா/க/ 7850 திரு. சங்கரன் கிட்டினன்
யா/க/ 7882 திரு. கந்தன் தருமன்
யா/க/ 7910 திருமதி.சிவக்கொழுந்து தம்பித்துரை
யா/க/ 7945 திருமதி. இரத்தினம் கனகசபை
யா/க/ 7957 திரு. செல்லையா நடராசா
யா/க/ 7987திரு.சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/க/7991 திருமதி. தங்கராணி சண்முகம்கிரேஸ்
யா/க/ 7999 திரு. குழந்தைவேல் இராசேந்திரம்
யா/க/ 8057 திருமதி. மாணிக்கம் கதிரேசு
யா/க/ 8076 திரு. கந்தையா குணசிங்கம்
யா/க/8131 திருமதி. ஞானாம்பிகை சிவராசா
யா/க/ 8148 திருமதி. இராசமணி விசுவநாதர்
யா/க/ 8153 திரு. சின்னத்தம்பி சண்முகம்
யா/க/ 8194 திருமதி. சிவபாக்கியம் செல்லையா
யா/க/ 8210 திரு.தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு

## மன்னார் மாவட்டம்

ம/ 4 திரு.சோமசுந்தரம் சிவரத்தினம்
ம/ 5 திரு.சின்னர் தாமோதரம்பிள்ளை
ம/ 10 திரு.சூசைப்பிள்ளை சாமிநாதன்
ம/ 14 திரு.நவரத்தினம் கோபாலசுந்தரம்
ம/ 21 திருமதி.ஜெகதீஸ்வரி பேரின்பநாதன்
ம/ 22 திரு.செல்வரத்தினம் செல்வராஜேஸ்வரன்
ம/ 24 திரு.கந்தையா கனகராயர்
ம/ 28 திரு.சின்னத்தம்பி சின்னத்துரை
ம/ 31 திரு.பாலசிங்கம் குமாரகுலசிங்கம்
ம/ 32 திரு.தம்பாப்பிள்ளை வசந்தகுமார்
ம/ 34 திரு.வேலுப்பிள்ளை செல்லத்துரை
ம/ 42 திருமதி.சிவபாக்கியம் சுப்பிரமணியம்
ம/ 44 திரு.வயிரமுத்து கந்தையா
ம/ 48 திருமதி.றீற்றா பிரான்சிஸ்
ம/50 திரு.கந்தன் கதிர்வேல்
ம/ 51 திரு.ப.வ. தோமஸ் எட்வேட்சில்வா
ம/ 54 திரு.செல்லத்துரை சதாசிவம்
ம/ 55 திரு.கந்தையா தர்மலிங்கம்
ம/58 திரு.ஐயம்பிள்ளை கேசவன்
ம/ 64 திரு.சோமலிங்கம் மனோகரன்
ம/ 66 திரு.கணபதி காசித்தம்பி
ம/68 திரு.இராசையா சந்திரலிங்கம்
ம/ 69 திரு.பிரான்சிஸ் சந்திரகுமார்
ம/ 72 திரு.பொன்னுச்சாமி இராசரத்தினம்
ம/ 73 திரு.ஆழ்வாப்பிள்ளை திருமால்
ம/ 74 திரு.மார்க்கண்டு மகாலிங்கம்
ம/ 76 திரு.மூத்ததம்பி இராசரத்தினம்
ம/ 78 திரு.சந்தியாப்பிள்ளை சாள்ஸ்
ம/ 79 திருமதி.ராதாசிவகாந்தன்
ம/ 82 திரு.செபஸ்தியாம்பிள்ளைஜோசெப்இராசதுரை
ம/83 திருமதி. மனோன்மணி வீரசிங்கம்
ம/ 86 திருமதி.கோமளவல்லி சங்கரப்பிள்ளை
ம/ 88 திரு.தங்கத்துரை நக்கீரன்
ம/ 90 திரு.சுந்தரம்பிள்ளை பூபாலசிங்கம்
ம/91 திரு.சுந்தரம்பிள்ளை தனபாலசிங்கம்
ம/ 94 திரு.நடராசா குகதாசன்
ம/ 96 திருமதி.தேவராணி இராசலிங்கம்
ம/98 திரு.செல்லையா நடராசா
ம/ 100 திரு.சின்னத்துரை உலகநாதன்
ம/ 103 திரு.டேவிற் அந்தோனிப்பிள்ளை
ம/ 106 திரு.தம்பிராசா சரவணமுத்து
ம/107 திரு.சின்னையா சிவஞானம்
ம/ 108 திரு.சீமான்பிள்ளை கிறிஸ்ரியன்
ம/ 109 திருமதி.மாணிக்கம் சண்முகநாதன்
ம/113 திருமதி.மரியகொரற்றி ஞானசிங்காரம்
ம/ 114 திரு.நீக்கிலாப்பிள்ளை சீமான்பிள்ளை
ம/ 116 திரு.ஐயம்பிள்ளை வீரவாகு
ம/ 117 திரு.சண்முகம் தருமலிங்கம்
ம/ 122 திரு.சுவக்கின் பிரான்சிஸ்
ம/ 125 திரு.செல்லத்தம்பி ரவி
ம/ 128 திரு.அகுஸ்தின் யுவானி
ம/ 130 திரு.அடைக்கலம் அந்தோனிப்பிள்ளை
ம/ 132 திருமதி.நாகரத்தினம் முருகேசு
ம/ 134 திரு.வினாசித்தம்பி முத்துலிங்கம்
ம/ 136 திரு.அந்தோனிப்பிள்ளை பிறேமரட்ணம்
ம/137 திரு.கார்த்திகேசு சேதுகாவலர்
ம/138 திருமதி.அன்னலட்சுமி பாலசுப்பிரமணியம்
ம/ 139 திருமதி.திலகவதி தர்மலிங்கம்
ம/ 141 திரு. மார்க்கண்டு பஞ்சலிங்கம்
ம/ 142 திருமதி.நாகேஸ்வரி சிவகுருநாதன்
ம/ 146 திருமதி.சறோஜினிதேவி சின்னத்துரை
ம/ 147 திரு.அந்தோனி டோமினிக்
ம/149 திரு.தேவசகாயம் பங்கிராசா
ம/ 150 திருமதி. வரதலட்சுமி தங்கராசா
ம/ 151 திரு. அருணாசலம் சரவணமுத்து
ம/154 திருமதி. தர்மபூபதி கனகரத்தினம்
ம/ 155 திரு.யக்கோப்பிள்ளை சவேரியான்
ம/158 திரு.இராசவாகர் காசிநாதன்
ம/159 திரு.பொன்னம்பலம் கனகலிங்கம்
ம/ 160 திரு.யக்கோப்பிள்ளை சலமோன்
ம/161 திரு.முத்துக்குமாரு குணசிங்கம்
ம/ 163 திருமதி.தனலெட்சுமி தில்லையம்பலம்
ம/164 திருமதி. சீதேவிப்பிள்ளை இராமசேது
ம/ 166 திருமதி.விஜயலட்சுமி பத்மநாதன்
ம/ 169 திருமதி.தவமலர் தியாகராஜா
ம/ 170 திரு.சவரிமுத்து சகாயநாதன்
ம/ 171 திரு.பிறகாசம் பங்கிராசா
ம/ 187 திருமதி.கேதீஸ்வரி நாகலிங்கம்
ம/ 188 திரு.சரவணமுத்து இலங்கராசன்
ம/194 திரு.மயில்வாகனம் நாகேந்திரன்
ம/ 195 திருமதி.பொன்னம்மா வேலாயுதம்
ம/196 திரு.மனுவேல்பிள்ளை சாள்ஸ்யோசப்
ம/197 திரு.பொன்னுத்துரை கியோமராசா
ம/198 திரு.செபராசா ஸ்ரிவின்சன்
ம/199 திரு.லூக்காஸ் பிரேமதாஸ்
ம/201 திரு.சிலுவைராசா ஸ்ரனிஸ்லஸ்
ம/ 202 திரு.சுப்பிரமணியம் தர்மலிங்கம்
ம/ 205 திரு.சாமிநாதன் யோன்கெனற்
ம/ 206 திரு.சந்தியோகு யேசுதாசன்
ம/208 திரு.அப்புத்துரை பத்மநாதன்
ம/ 209 திரு.சவரிமுத்து பிரான்சிஸ் ஜேசுதாசன்
ம/ 210 திரு.சந்தியோகு அந்தோனிசம்பாய்வ
ம/ 211 திரு.சிமியோன்பிள்ளை தமியான்பிள்ளை
ம/ 213 திரு.யோசேப் செல்வம்கொடுதோர்
ம/214 திரு.தங்கையா சகாயசீலன்
ம/ 215 திரு.பெனடிற்பத்திரனார் ஜெயஜீவகயோசப்
ம/216 திரு.வேலு செல்வநாயகம்
ம/ 217 திரு.மரியதாசன் றொபேட்
ம/ 218 திருமதி.ஜெனோவா பார்த்தசாரதி
ம/ 223 திரு.யோன்பிள்ளை எமலியூஸ்
ம/ 224 திரு.சுப்பிரமணியம் தேவராசா
ம/226 திரு.கனகரத்தினம் ஐயாத்துரை
ம/227 திரு.கறுப்பையா கோவிந்தசாமி
ம/228 திரு.ஞானப்பிரகாசம் பிரான்சிஸ்
ம/ 229 திரு.மரியதாஸ் ஜேம்ஸ்
ம/ 231 திரு.அந்தோனிமுத்து அல்பிரட்
ம/ 234 திரு.சந்திரசேகரம் வையிந்திலிங்கம்
ம/236 திரு.நடராஜன் சுந்தரராஜன்
ம/237 திரு.சூசைப்பிள்ளை அன்ரன்
ம/ 238 திரு.அந்தோனி மத்தியூஸ் கொடுதோர்
ம/ 239 திருமதி.அந்தோனியம்மா சந்தியோகு
ம/ 247 திரு.வல்லிபுரம் கணேந்திரன்
ம/248 திரு.வயிரவநாதர் சோதிலிங்கம்
ம/ 249 திரு.கணபதிப்பிள்ளை வேலாயுதம்
ம/251 திரு.செல்லத்துரை சின்னத்தம்பி
ம/ 252 திரு.பெர்னாண்டோ இம்மானுவேல்
ம/254 திரு.ஞானப்பிரகாசம் யோசப்
ம/ 255 திரு.அந்தோனிமுரால் பத்திநாதன்
ம/ 259 திரு.அமிர்தநாதர் அந்தோனி
ம/ 260 திருமதி. சேதுராணி நடராசா
ம/261 திருமதி. குணவதி திருநாவுக்கரசு
ம/ 266 திரு. தம்பு பாலசுப்பிரமணியம்
ம/ 267 திருமதி.நித்தியானந்தேஸ்வரி தியாகராஜா
ம/ 268 திரு.சூசை முடியப்பு
ம/269 திரு.கணபதிப்பிள்ளை ருத்திரகுமார்
ம/ 273 திரு.கந்தையா நடராஜா
ம/ 274 திரு.செல்லத்துரை நடராசா
ம/277 திரு.செல்லத்துரை சண்முகநாதன்
ம/ 278 திரு.அருணாசலம் பொன்னுத்துரை
ம/ 282 திரு.விசுவநாதர் இராசரத்தினம்
ம/284 திரு.அம்பலவாணர் குகதாசன்
ம/ 285 திரு.பொன்னுச்சாமிமுதலியார்சுந்தரராஜ்
ம/ 292 திரு.முருகேசு தவபாஸ்கரன்
ம/ 293 திரு.குமாரு செல்வராசா
ம/294 திரு.சின்னையா பத்மநாதன்
ம/ 295 திரு.நீக்கிலஸ் இராஜசூரியர்
ம/ 296 திரு.சாமிநாதஐயர் நிவிர்த்திசாதுசர்மா
ம/ 300 திருமதி. நேசராணி அலெக்ஸ்சாண்டர்
ம/ 301 திரு. சின்னையா அம்பிகைபாகுதேவன்
ம/304 திரு.நீக்கிலாப்பிள்ளை செபரட்ணம்
ம/ 305 திரு.அறுங்காஞ்சி மாணிக்கராசா
ம/ 310 திருமதி.மேரிசாந்தி வரப்பிரகாசம்
ம/ 311 திருமதி.புஸ்பவதி அன்னலிங்கம்
ம/313 திரு.மரியதாஸ் அல்போன்ஸ்
ம/ 318 திரு.மிக்கேல் தோமாஸ்
ம/ 320 திரு.முத்துக்குமார் கனகசிங்கம்
ம/ 325 திரு.ஐயாத்துரை ஜோதிநாதன்
ம/326 திரு.வயிரமுத்து அருள்ராஜன்
ம/ 327 திரு.யோசேப் றொபெட்சில்வா
ம/ 330 திருமதி.செபமாலைமரியை கிறிஸ்தோகு
ம/ 332 திரு.முத்தையா திருநாவுக்கரசு
ம/333 திரு.மாதாடிமை யோனர்மார்க்கு
ம/334 திரு.பிரகாசம் இராஜேந்திரா
ம/335 திரு.சந்தியோகு செபமாலைசம்பாய்வ
ம/ 339 திரு.சூசைப்பிள்ளைஅன்ரனிஸ்இராசநாயகம்
ம/ 342 திரு.சிமியோன் யேசுதாசன்
ம/ 350 திருமதி.மேரியூக்கறிஸ்ரா மிக்கேல்சில்வா
ம/ 351 திரு.பொன்னம்பலம் இராமநாதன்
ம/352 திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம்
ம/353 திருமதி.சிவஞானேஸ்வரி கனகசுந்தரம்
ம/355 திரு.அருணாசலம் ஐயம்பிள்ளை
ம/ 359 திரு.மாரிமுத்து நடராசா
ம/ 360 திரு. பொன்னர் கந்தையா
ம/ 362 திருமதி. சிவமலர் ஈஸ்வரன்
ம/ 367 திரு.இராசையா சிவநாதன்
ம/368 திரு.இராசையா விவேகானந்தன்
ம/371 திருமதி.யசிகலா இராஜேந்திரன்
ம/ 372 திரு.இராசையா இராசரத்தினம்
ம/373 திரு. தம்பிப்பிள்ளை சேகர்
ம/ 376 திரு. இரத்தினம் பரமேஸ்வரன்
ம/ 377 திருமதி. பரமேஸ்வரி ஆனந்தராஜ்
ம/ 381 திருமதி.சித்திரா சாந்தலிங்கம்
ம/ 382 திரு.இராசையா பத்மநாதன்
ம/ 383 திரு.சபாபதி பால்ராசா
ம/384 திரு.கார்த்திகேசு கனகராசா
ம/387 திருமதி.புவனேஸ்வரி யோகராசா
ம/ 388 திருமதி.ஞானகுமாரி திருஞானம்
ம/ 390 திரு.செபஸ்தியாம்பிள்ளை வேதராசா
ம/393 திரு.வேலன் இரத்தினம்
ம/ 394 திரு.செல்லையா பஞ்சலிங்கம்
ம/ 395 திரு.விசுவநாதர் பாலசுப்பிரமணியம்
ம/ 400 திரு.கணபதி செல்வராசா
ம/402 திருமதி.சிவபாக்கியம் செல்வராசா
ம/404 திருமதி.சோதிமலர் தர்மலிங்கம்
ம/ 405 திருமதி.இரத்தினபூபதி கந்தையா
ம/ 408 திரு.நல்லையா மனோகரன்
ம/ 410 திரு.சண்முகலிங்கம் ஜெகதீசன்
ம/ 411 திரு.கந்தையா இராமசேது
ம/ 412 திரு.முத்துக்குமார் இளசிங்கம்
ம/413 திரு.விஸ்வலிங்கம் மல்லிகாந்தன்
ம/ 414 திரு.அகஸ்ரீன் சீமான்
ம/420 திரு.செல்வராசா சிவனடியான்
ம/ 421 திருமதி.எமெல்டா கஸ்துலப்பர்
ம/ 423 திருமதி.றெஜி பத்மநாதன்
ம/424 திரு.சவேரியான் சூசைதாஸ்
ம/425 திரு.சுவக்கின் ஏசடியான்
ம/ 426 திரு.கனகசபை ஜெகதீஸ்வரன்
ம/ 428 திருமதி.கிறிஸ்ரினா வலத்திசார்
ம/ 431 திரு.பெனடிக்ற்அலோசியஸ் பிறேமதாசன்
ம/ 435 திரு.சவுரி பிலிப்புநேரிஸ்
ம/ 436 திருமதிமேரிதிரேசா யோகநாதன்
ம/ 437 திரு. சந்தாம்பிள்ளை கோமதாஸ்
ம/ 441 திரு. மத்தியாஸ் பிலிப்பு
ம/ 446 திருமதி. சிவபாக்கியம் நாகலிங்கம்
ம/ 447 திரு. நாகலிங்கம் தம்பிராஜா
ம/ 449 திரு.அந்தோனிப்பிள்ளைமத்தேஸ்பிள்ளை
ம/ 450 திரு.அந்தோனி அருட்பிரகாசம்
ம/ 451 திரு.அந்தோனிமுத்து அமிர்தசிங்கம்
ம/ 454 திருமதி. மேரிறீற்றம்மா அலோசியஸ்
ம/ 456 திரு.செபமாலை யேசுதாசன்
ம/ 457 திரு.யோசேப் யோஜ்ராசா
ம/ 458 திரு.கந்தையா வீரசிங்கம்
ம/ 459 திரு.வல்லிபுரம் பத்மநாதபிள்ளை
ம/460 திரு.மனுவேற்பிள்ளை செபமாலை
ம/ 461 திரு.செபமாலை மனுவல்டபறேரா
ம/ 463 திரு.சிங்கராயர் அந்தோனிலோகு
ம/464 திரு.சிவபாக்கியம் பிரான்சிஸ்
ம/ 466 திரு. திருச்செல்வம் செபமாலை லெம்பேட்
ம/ 467 திரு.வயிரவநாதர் வன்னியசிங்கம்
ம/ 469 திரு.துரையப்பா தர்மலிங்கம்
ம/470 திரு.சோலையப்பன் இராமன்
ம/ 471 திரு.செபமாலை சூசைநாயகம்
ம/ 474 திரு.சேவியர் பிரான்சிஸ்
ம/ 475 திரு.சந்தான் பிலேம்திரன்
ம/ 476 திரு.யோன் செபமாலைமரியநாயகம்

(தொடரும்)

# இராணுவத்தலைமையின் அலட்சியமே புலனாய்வு அதிகாரி கொலைக்கு காரணம்

## இராணுவ புலனாய்வு அதிகாரிகள் குற்றச்சாட்டு

இலக்கு வைக்கப்படுவோரின் பட்டியலில் இருக்கும் இராணுவத்தின் புலனாய்வுத்துறை அதிகாரிகள் எட்டுப்பேரின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு அந்த அதிகாரிகள் இராணுவத் தலைமையகத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பது ரிஸ்வி.மீடினின் படுகொலையின் மூலம் உறுதியாகியிருப்பதாக இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முத்தலிப்பின் படுகொலை மற்றும் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஹெந்தரவிதாரன புலனாய்வுத்துறையிலிருந்து நீக்கப்பட்டமை ஆகியவற்றின் பின்னர் புலனாய்வுத்துறை அதிகாரிகளின் பாதுகாப்பு, வசதிகள், சுதந்திரம் என்பன பாதிப்படைந்திருப்பதனால் பல புலனாய்வுத்துறை அதிகாரிகள் விரக்தியடைந்த நிலையில் இருப்பதாகவும் அந்தப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் பணிகளுக்கு ஒருஇலட்சத்து 70 ஆயிரம் பேர்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் பணிகளில் ஒரு இலட்சத்து 70ஆயிரம் அரச சேவையாளர்களை ஈடுபடுத்த தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது. தேர்தல் கடமைகளுக்காக அரச சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன்,தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை ஏற்கனவேதொடங்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்
## ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான நேர்முகத்தேர்வு

**பயிற்சிக் காலக் கொடுப்பனவு:- 4000/=**
**(பயிற்சிக் காலத்தில் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்)**

தமிழீழப் போக்குவரவுக் கழக ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளை 06.11.2005 ஆம் நாள் ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் பகல் 2.00மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழகம் நடுவப் பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

○ ***(பயிற்சி நிறைவடைந்ததும் தரத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்)***

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-13146)



## வட–கிழக்குக் கட்டுமான தொழில்நுட்ப நிறுவனம்
## NORTH EAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION

## சாரதிகள் தேவை

### 01. கன்ரர் வாகனம்

தகைமை:- கொழும்பு மற்றும் ஏனைய இடங்களிற்கு சென்று வரக்கூடியவராகவும், சிங்கள மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

### 02. லோபெட் ரெயிலர்.

(கனரக வாகனங்களை ஏற்றிச் செல்லும் வாகனம்)

தகைமை:- 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

சம்பளம்:- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

### நேர்முகத் தேர்வு:–

(07.11.2005) திங்கட்கிழமை அன்று காலை 8.30மணி முதல் 1.00 மணி வரை தங்களுக்கான நேர்முகத் தேர்வு அலுவலகப் பணிமனையில் நடைபெறும். தகுந்த ஆவணங்கள், சான்றுகளுடன் நேரடியாக பணிமனைக்குச் சமுகம் தரவும்.

மனிதவள மேலாளர்,
வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
(NECTEC)
கண்டிவீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி,
தொலை பேசி இல:- 021228 85917

(சி.13150)



# தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் பின்வரும் பணிநிலைக்குத் தகைமை உள்ளவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை :-** தொழில்நுட்ப உத்தியோகத்தர்

**அகவை :-** 24 வருடங்களிற்கு மேல்

**தகைமை :-** தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NATIONAL DIPLOMA IN TECHNOLOGY (NDT)
அல்லது
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ்
NATIONAL CERTIFICATE IN TECHNOLOGY (NCT)
அல்லது
படவரைஞர்
DRAUGHTMEN SHIP

**ஊதியம் :-** நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளுக்குச் சமமான கல்வித்தகைமை, பட்டறிவு உள்ளவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினபுரம் மேல்மாடி, யாழ்.சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக மனிதவளப்பகுதிக்கு 10.11.2005 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

- கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
- பட்டறிவுச் சான்றிதழ்கள்
- நற்சான்றிதழ்கள்
- பிறப்புப் பதிவுப் பொத்தகம்(மூலம்)
- தேசிய அடையாள அட்டை

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-13259)



# Vacancy Immediate
## *Car Pool Manager*
## *Closing Date: 9 November 2005*

The International committee of the Red cross, kilinochchi Subdelegation, is seeking for a qualified professional to carry out duties as a **Car pool Manager.**

**Core responsibilities** include:

- Planning and follow up of all the movements through the lines
- Coordination of the field movements with other departments and sub- delegations
- Planning, organization and dispatching of a fleet of up 30 vehicles and drivers
- Ensures economic use of vehicles and generators
- establishment of service schedules for vehicle/ generator fleet
- Monitoring of fleet use and fuel consumption

The candidate should have the following **qualifications:**

- High school level or professional school of similar degree
- 2 Year work experience in a similar field (Logistics, Transport)
- Good command of spoken and written English and Tamil
- Computer literacy
- Valid driving licence (>5 Years), practical experience with driving of offroad vehicle
- Excellent teamplayer, stress-resistant personality

**Employment Conditions;**

Workplace: ICRC-offices in kilinochchi
According to ICRC's National Scale and employment conditions
Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopies of relevant certificates) to ICRC's office in kilinochchi until **Wednesday, 9th November 2005.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE REDCROSS**
**Subdelegation kilinochchi**
**Iranaimadu Junction**
**kilinochchi**
**Phone: 0712375697**

(சி-13301)

# கேள்வி அறிவித்தல்

## கிளிநொச்சியில் அரசஅதிபருக்கான சுற்றுலா விடுதி அமைத்தலுக்கான கேள்வி கோரல்

**மேற்குறித்த வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் 2005.09.05 ஆம் திகதிய நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளவாறு, அதில் குறித்த நிபந்தனைகளுடன் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு நாள் 2005.11.10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபரும்,
கேள்விச்சபைத் தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.13108)

# சாவு அறிவித்தல்

## கதிரவேலு மாலையம்மா

*வள்ளுவர்புரம் விசுவமடு இலக்கம் 438 ஐ வசிப்பிடமாகக் கொண்ட திருமதி. கதிரவேலு மாலையம்மா அவர்கள் 03.11.2005 அன்று காலமானார் இவர் சண்முகம் கதிரவேலு (சாத்திரியார்) அவர்களின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம், நவரத்தினம்,சிவபாக்கியம், யசோதா , பிறேம்குமார், ஜமுனாதேவி,குமரகுரு, ஜோதிமலர் ஆகியோரின்அன்புத் தாயாரும், சண்முகராசா, இராஜலட்சுமி, லலிதா, சேனன், செல்வநாதன், ரஞ்சி, கணேசன், அந்தோனிமேரி, இராஜகோபால் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.11.2005 இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்கோபுரம் பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

தகவல்
பிள்ளைகள்,
(மருமக்கள்)

(6907)

# பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள்

## மாவட்ட செயலகம்

## கிளிநொச்சி

UNDP

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் பொது நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ள மீட்பு நிகழ்ச்சி திட்டத்திற்கான திறன் அபிவிருத்தித்திட்டத்தின் (CADREP) கீழ் கிளிநொச்சி. மாவட்டத்திற்கென கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | வெற்றிடம் |
|---|---|
| 01. ஜீவனோபாய அறவீட்டு அலுவலர் | -03 |
| 02. காணி இணைப்பாளர் | -01 |

**1.ஜீவனோபாய அறவீட்டு அலுவலர்**

I. கல்வித்தகைமை
க.பொ.த உயர்தரத்தில் சித்தியும்,
க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம்,தமிழ் போன்ற பாடங்களில் திறமை சித்தியுடன் கூடிய சித்தி
II.தொழில்சார் அனுபவம்
குறைந்தது எட்டு வருடங்கள் ஜீவனோபாய உதவித் திட்டம் தொடர்பான துறைசார் அனுபவம்.

**2.காணி இணைப்பாளர்**

I.கல்வித்தகைமை
க.பொ.த உயர்தரத்தில் புவியியலை ஓர் பாடமாகக்கொண்ட சித்தியும் க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழ், சமூகக் கல்வி போன்ற பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய சித்தி
II.தொழில்சார் அனுபவம்
குறைந்தது ஐந்து வருடங்கள் துறை சார்ந்த அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்

இப்பதவிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படுவதுடன் ஆரம்பத்திற்கு புதுப்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளுடனான ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள், இளைப்பாறிய அதிகாரிகள் மற்றும் தறபோது உத்தியோகத்தில் உள்ள பொதுச்சேவையாளர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் இரண்டு உறவினர்கள் அல்லாத நடுவர்கள் அடங்கிய தொலைபேசி இலக்கங்களுடன் சுயவிபரத்துடனான விண்ணப்பத்தை 19.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர்-மாவட்டச் செயலாளர், மாவட்டச்செயலகம். கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,மாவட்டச் செயலாளர்,
மாவட்டச்செயலகம்,
கிளிநொச்சி மாவட்டம்,

(சி. 13303)

# University of Jaffna- Sri lanka

## Faculty of Graduate Studies

### Master of Arts in Development Studies
### Academic Year 2005/06- Batch I

## New Admission

Application are invited for the above fee levying coures

**Admission Requirements:**

Admission is open to all graduates of any recognized university or those with any other qualifications and/or experience which would be aceptable to the Senate of the University of Jaffna

**Duration:**

One year

Lectures will be conducted in evenings on Weekdays and on Saturday and sundaay

**Medium:** Tamil

**Admission:**

Admission to the course will be made on the basis of an interview conducted by the University of Jaffna

Application forms and other details may be obtained form the Assistant Registrar Faculty of Graduate Studies University of Jaffna either in person or by post on a payment of Rs.100/- per form Those who wish to obtain application forms by post are requsted to send a money order drawn in favour of the Bursar University of Jaffna together with a self addressed stamped envelops 23x10 cm in size

**Application forms will be issued from 03.11.2005 to 15.11.2005.**

All completed applications forms should be forwarded to the Assistant Registrar Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely to reach on or before 20.11.2005.

Registrar
02/11/2005

(சி.13214)

# University of Jaffna-Sri Lanka -

## Faculty of Graduate studies

### Master of Education in English Medium

### Academic Year 2005/06

Applications are invited for the above course.

**Admission Requirements:**

Applicants should posses

a Bachellor's Degree and the postgraduate Diploma in Education from a *recogniZed University*

OR

a Bachelor of Science (with Education) Degree from a recogniZed University.

**Duration:**

One Year

Lectures will be conducted in evenings and on Saturdays and Sunday.

**Admission:**

Admission to the course will be made on the basis of a written test and/ or an interview conducted by the University of jaffna.

Application forms and other details may be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, university of Jaffna either in person or by post on a payment of Rs.100/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of jaffna together with a self-addressed stamped envelope 23x10cm in size. **Application forms will be issued from 03.11.2005 to 15.11.2005.**

All completed applications froms should be forwarded to the Assistant Regstrar, faculty of graduate Studies, University of Jaffna, Thirunelvely to reach on or before 20.11.2005.

Note: if any of those who have already sent in their applications for the M.Ed course (Tamil medium) wish to follow the course in the English medium, they are requested to send in the fresh application.

Registrar
2/11/2005.

(சி.13215)

## பிறிஸ்பேன் டெஸ்ட் போட்டி

# அவுஸ். 435 ஓட்டம் குவிப்பு தடுமாறுகிறது மேற்கிந்தியத்தீவு





பிறிஸ்பேனில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டியில் அவுஸ்திரேலிய அணி 435 ஓட்டங்களை குவித்துள்ளது. போட்டியின் முதல் நாளான நேற்று முன் தினம் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களை பெற்றிருந்த அவுஸ்திரேலியா நேற்று தொடர்ந்து ஆடி 435 ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

நேற்றைய ஆட்டத்தில் வோர்ன், பிரெட்லீ, பிரேக்கன் ஆகியோர் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தனர். அவர்கள் முறையே 47,47,37, ஓட்டங்களைப் பெற்றனர். முதல் நாள் ஆட்டத்தில் அணித்தலைவர் பொண்டிங் 149 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் கொலிமோர் நான்கு விக்கெட்டுக்களையும் பவல்மூன்று விக்கெட்டுக்களையும், எட்வட்ஸ் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்சை ஆடும் மேற்கிந்தியத்தீவு இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது ஆறு விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



ஆட்டமிழந்தவர்களில் அணித்தலைவர் சந்தர்போல் (2) லாறா (30) கைல்ஸ்(10) சர்வான்(21) சிமித் (88) சாமூவேல் ஐந்து ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் மெக்ராத் நான்கு விக்கெட்டுக்களையும் வோர்ன், பிரட்லீ தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.





ஐரோப்பாவில் நடைபெற்றுவரும், 'உய்பா' கிண்ணத்துக்கான கால்பந்து போட்டியில் சென்பீற்றர்பேர்க்கில் நடைபெற்ற போட்டியில் கெனித் அணிக்கெதிராக பொல்டன் அணி வீரர் நோலன்ட் கோல் அடித்த மகிழ்ச்சியில் ஓடிச் செல்வதையும், போட்டியின்போது குறுக்கிட்ட மழைக்கு மத்தியில் போட்டியில் ஈடுபட்டுள்ள அணி வீரர்களையும் படங்களில் காணலாம்.

## நல்லவாய்ப்பை தவறவிட்டதால் தோல்வி அடைந்தோம்

### அத்தப்பத்து



இது எங்களுக்கு நெருக்கடியான காலம் நல்ல வாய்ப்புக்களை தவற விட்டதால் இப்போட்டியில் தோல்வியடைந்து விட்டோம் என சிறிலங்கா அணித்தலைவர் அத்தப்பத்து தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புனேயில் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியிலும் தோல்வியடைந்து தொடரை இழந்த நிலையில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும்போது அத்தப்பத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஐந்தாவது ஒரு நாள் போட்டி; சிறிலங்கா வீரர்களுக்கு காப்பீடு

இந்திய- சிறிலங்கா அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் வரும் ஆறாம்திகதி பகலிரவாக நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்கேற்கும் சிறிலங்கா வீரர்கள் அனைவருக்கும் ரூ.பத்து இலட்சம் காப்பீடு செய்துள்ளது குஜராத் கிரிக்கெட் சங்கம். ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதை ஈடுகட்டுவதற்காக சிறிலங்கா அணியினர் அனைவருக்கும் காப்பீடு செய்துள்ளோம் என குஜராத் கிரிக்கெட் சங்கத்தலைவர் நரஹரி அமின் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்களுக்கு இந்திய வாரியமே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றார் அவர்.



## சச்சினை விடாத வாஸ்



சாமர்த்தியமாக பந்து வீசி சச்சினை சாய்ப்பதில் சமிந்தவாஸ் படுகில்லாடி. நேற்றுமுன்தின போட்டியும் இதற்கு விதிவிலக்கல்ல. 11ஓட்டங்களில் தேவையில்லாமல் இவரது பந்தை அடித்து ஆட இறங்கி தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார். சச்சின் இப்படி வாஸ் பந்தில் ஆட்ட மிழப்பது எத்தனையாவது முறை தெரியுமா? அந்த எண்ணும் சச்சினுக்கு பிடிக்காத ஒன்று தான். ஆம் ஒன்பதாவது முறையாக ஆட்டமிழந்தார்.

## டோனி, ராய்னா, ராவ் இந்திய அணியின் எதிர்கால தூண்கள் - ராகுல் ராவிட்



மகேந்திரா டோனி, சுரேஷ் ராய்னா, வேணுகோபால் ராவ் ஆகியோரது கையில் எதிர்கால இந்திய துடுப்பாட்டம் உள்ளது என இந்திய அணியின் தலைவர் ராகுல் ராவிட் புகழாரம் சூட்டியுள்ளார்

புனேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருநாள் ஆட்டத்தில் நான்கு விக்கெட்டில் இலங்கையை வென்றது இந்தியா. அதன்பின் செய்தியாளர்களிடம் ராவிட் பேசியபோது மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார். இக்கட்டான சூழலில் டோனியும் ,ராய்னாவும் எவ்வித பயமும் இன்றி அபாரமாகஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். பத்து ஆட்டங்களில் விளையாடிய அனுபவத்தைப் பெறாத இளம் வீரர்கள் நாட்டின் வெற்றிக்காகக் கடினமாக உழைப்பது மிகவும் பாராட்டுக்குரியது என்றார் ராவிட்.

## நல்லூர் கல்வி கோட்ட உதைபந்தாட்டம் செங்குந்தா இ.க. யாழ். இந்துக் கல்லூரி வெற்றி

நல்லூர் கல்விக்கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டசுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகளில் முறையே 16,18 வயதுப் பிரிவுகளில் கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியன சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

பதினாறு வயதுப்பிரிவில் செங்குந்தா இந்துக்கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டன. ஆட்டமுடிவில் செங்குந்தா இந்துக்கல்லூரி1:0 என்ற கோல் கணக்கில் யாழ்.இந்துக்கல்லூரியை வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

பதினெட்டு வயதுப்பிரிவில் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதல் பாதிஆட்டத்தில் ஒருகோலையும் இரண்டாம் பாதிஆட்டத்தில் இரண்டு கோல்களையும் அடித்து 3:0 என்றகோல் கணக்கில் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தை வென்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.



மூன்றாம் இடத்தை 16,18வயதுப் பிரிவுகளில் கொக்குவில் இந்துக்கல்லூரி பெற்றுக்கொண்டது

(41)

# இங்கிலாந்து கவுண்டி அணியில் வெளிநாட்டு வீரர்களுக்கு கண்டிப்பு



ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிலுள்ள அணிக்கு விளையாடுவது என்றால் வீரர்களுக்கு எப்போதும் அலாதியான விருப்பம். கௌரவம் கிடைப்பதுடன் வருவாயும் ஈட்டுவது ஒரு காரணம். ஹொக்கி, கூடைப்பந்து. கரப்பந்து கால்பந்து உள்ளிட்ட பிரிவுகளில் இந்திய வீரர்கள் வெளிநாடுகளில் லீக் போட்டிகளில் பங்கேற்று சொற்பமான வருவாயை ஈட்டி வருகின்றனர்.

அதேபோல பணம் கொழிக்கும் கிரிக்கெட் விளையாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது இங்கிலாந்தில் ஆண்டுதோறும் நடைபெறும் கவுண்டிப் போட்டிகள். இப்போட்டிகளில் கிரிக்கெட் விளையாடும் நாடுகளிலிருந்து பல வீரர்கள் அவ்வப்போது அங்குள்ள அணிகளுக்காக விளையாடி வருவாயை ஈட்டுகின்றனர். அத்துடன் தங்களை செம்மைப்படுத்தவும் வாய்ப்பாகக் கொள்கின்றனர்.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலிகூட கவுண்டியில் கிளாமர்கான் அணிக்காக சமீபத்தில் ஆடினார்.

கவுண்டி கிரிக்கெட்டில் பட்டம் வெல்வது அந்நாட்டில் மிகவும் கௌரவமாகக்கருதப்படுகிறது. அதனாலேயே வெளிநாடுகளில் இருந்து சிறந்த வீரர்களை விளையாட அங்குள்ள கழகங்கள் ஒப்பந்தம் செய்து கொள்கின்றன.

சமீபத்தில் முடிவுற்ற சீசனில் ஹேம்ப்ஷையர் கழகம் ஆறு வெளி நாட்டு வீரர்களை விளையாட வைத்தது. இதனால் கழகங்கள் மற்ற சிறிய கழகங்கள் பாதிக்கப்படுவதாக கருத்து எழுந்துள்ளது. வெளிநாட்டு வீரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை எதிர்காலத்தில் மேலும் அதிகப்படுத்தலாம் என்ற நிலையும் உள்ளது. இதனால் டெர்பிஷையர் மாதிரியான சிறிய கழகங்கள் வெகுவாக பாதிக்கப்படும் என்ற கருத்து மேலோங்கியுள்ளது.



அதனால் 2006 சீசன் முதல் குறைந்தபட்சம் ஓர் அணியில் ஒன்பது இங்கிலாந்து வீரர்கள் இடம்பெற வேண்டும். அதைக் கடைப்பிடிக்காத கழகங்களுக்கான வருவாயில் பிடித்தம் செய்வதுடன் அபராதமும் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கவுண்டியில் ஒரு நாள் போட் டிக்கு இரண்டு வெளி நாட்டு வீரர்கள் விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அதற்கும் அதிகமான வீரர்களை விளையாட வைக்கும் கழகங்கள் ஒவ்வொரு மேலதிக வீரருக்கும் ஒருவருக்கு அபராதம் செலுத்த வேண்டும். அதே சமயம் சம்பியன் ஷிப் போட்டிக் கெனின் அபராத தொகைமேலும் அதிகமாகும்.

## சிந்தனைக்கு



இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 05.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# மகிந்தவின் வெற்றி?

சிறிலங்காவிற்கான சனாதிபதித் தேர்தலில் சிங்களவரின் நம்பிக்கைக்குரியவராக மகிந்த ராஜபக்ஷவே உள்ளார் என மாற்றுக் கொள்கைக்கான மையம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் முடிவொன்று தெரிவிக்கின்றமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. அத்தோடு இம்முடிவானது மகிந்தராஜ பக்ஷ தனது நோக்கில் வெற்றி அடைந்துள்ளார் என்பதையே வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டதும் தன்னை சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் என்பதற்கும் அப்பால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக வெளிக்காட்டிக்கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கை இதனை அடியொற்றியதாகவே இருந்தது. அதாவது தன்னை சிங்கள மக்களின் வேட்பாளராக அதிலும் குறிப்பாக பௌத்த சிங்கள மக்களின் வேட்பாளராகத் தன்னை நிலைநிறுத்துவதற்கான முயற்சியாகவே இருந்தது.

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற்றதும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிச் சென்ற ஜே.வி.பி.யுடன் உறவை மேம்படுத்திக்கொள்வதிலேயே அக்கறை காட்டினார். ஜே.வி.பி.யுடன் கூட்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு மாறானதென சனாதிபதி சந்திரிகா எச்சரித்தபோதும் மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை.

இதில் சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு மாறானதெனச் சந்திரிகா கூறுவது என்னவெனில் வெளிப்படையாக சுதந்திரக் கட்சியை இனவாதக்கட்சி எனக் காட்டிக்கொள்ளக்கூடாது என்பது மட்டுமே. அதாவது இனவாதம் பேசுவது இனவாதத்தை தமது அரசியல் கொள்கையாக கொண்டுள்ளவர்களுடன் வெளிப்படையான கூட்டுக்களை வைத்துக்கொள்வதில்லை என்பனவயே சுதந்திரக்கட்சியின் கொள்கை. அதற்கு அப்பால் அதனை ஒரு இனவாதமற்ற கட்சி என்றோ இனவாதிகளுடன் தொடர்புகள் அற்ற கட்சி என்றோ கூறுவதற்கு இல்லை.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் வெளிப்படையாக இனவாதத்தை ஆதரிப்பதாக இருந்தது. அதாவது நெருக்கடியின்போது எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா உட்பட சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறு சிங்களவர்களுக்கு மட்டுமே தலைவர்களாக இருந்தார்களோ அதேபோன்றே மகிந்த ராஜபக்ஷவும் சிங்கள மக்களின் தலைவராகவே வெளிக்காட்ட முற்பட்டார்.

இதன் அடிப்படையிலேயே இனவாத கட்சிகளான ஜே.வி.பி., ஜாதிகஹெலஉறுமய போன்ற கட்சிகளுடன் கூட்டுக்களை ஏற்படுத்திக்கொண்டார். அதாவது சனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு சிங்களவர்களின் ஆதரவு ஒன்றே போதுமானதென்ற நிலைப்பாட்டுடன் அவரது அரசியல் நடவடிக்கைகள் இருந்தன. இதன் அடிப்படையிலேயே ஜே.வி.பி, ஜாதிகஹெலஉறுமய போன்றவை முன்வைத்த இனவாத அடிப்படையிலான நிபந்தனைகளையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

அதாவது நாட்டின் முக்கிய பிரச்சினைகளான இனப்பிரச்சினை, விலைவாசி ஏற்றம், வேலைவாய்ப்பின்மை இவற்றிற்கும் அப்பால் யுத்தம் குறித்த எந்தவித சாத்தியப்பாடான திட்டங்களும் இன்றி பௌத்த–சிங்கள அடிப்படைவாதத்தின் மீது நம்பிக்கை கொண்டே மகிந்தராஜபக்ஷ தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

மகிந்தராஜபக்ஷவின் இம்முடிவு தெளிவாக இருந்தது என்பதற்கு அவர் சிறுபான்மை இனக்கட்சிகளுடன் தேர்தல் உடன்பாட்டிற்குப் பெரும் முயற்சி எதனையும் மேற்கொள்ளாமல் இருந்ததில் இருந்தே புரிந்துகொள்ள முடியும். அதிலும் குறிப்பாக அரசாங்கத்தில் பங்கேற்றிருந்த ஆறுமுகம் தொண்டமானின் இ.தொ.க வுடன் கூட மகிந்த ராஜபக்ஷவால் இணக்கப்பாடு ஒன்றைக்காண முடியாது போய்விட்டதைச் சுட்டிக்காட்டமுடியும்.

சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்கள் மகிந்தராஜபக்ஷவிற்கு ஆதரவு அளிப்பதாகக் கூறலாம். ஆனால் அத்தகையதொரு நிலைப்பாட்டைச் சிறுபான்மையின பா.உ கள் எடுப்பதற்கு அவர்களுக்கு மகிந்தராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகள், உறுதிமொழிகள் என்பன காரணம் அல்ல. அவர்களுக்கு மகிந்தராஜபக்ஷவை விட்டால் போக்கிடம் இல்லை என்பதினாலேயே ஆகும்.

இந்தவகையில் பார்க்கையில் மகிந்தராஜபக்ஷ அடிப்படைவாதச் சிந்தனை கொண்ட சிங்களவர்களின் நம்பிக்கைக்குரியவராக இருப்பது ஒன்றும் புதினமானதல்ல. அத்தோடு இதன்மூலம் மகிந்த ராஜபக்ஷ தனது இலக்கை அடைந்து விட்டார் என்றும் கூறலாம்.

ஆனால் தற்பொழுதுள்ள கேள்வி மகிந்த ராஜபக்ஷ இவ்வியூகத்தின் மூலம் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியுமா? என்பதே ஆகும். அதாவது யுத்தம் உட்பட நாட்டின் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும் மீறி பௌத்த - சிங்கள அடிப்படை வாதிகளின் ஆதரவுடன் மட்டுமே சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியுமா? என்பதே ஆகும்.

# பிரதமரின் பாதுகாப்பு பிரிவினரால் ஊடகவியலாளர்கள் அவமதிப்பு!

(கொழும்பு)

பத்தரமுல்லயில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் திறப்பு விழாவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவினால் கீழ்த்தரமாக நடாத்தப்பட்டுள்ளனர்.

அரச மற்றும் தனியார் ஊடகங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் இவ்வாறு கீழ்த்தரமாக நடாத்தப்பட்ட அதேவேளை தமிழ் ஊடகங்கள் மீது சீறிப் பாய்ந்த மகிந்தவின் பாதுகாப்பு பிரிவினர் ஊடக அடையாள அட்டையைப் சோதனை செய்துவிட்டு விழாவுக்கு அனுமதிக்காது வெளியே காத்திருக்கச் செய்தனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த விழா நேற்று இடம்பெற்றதுடன் தொழில் அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன மற்றும் தொழில் துணை அமைச்சர் மேர்வின் சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பங்குகொள்ளுமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் ஊடக நிறுவனங்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் விழாவுக்கு சென்ற ஊடகவியலாளர்களை வாசலில் தடுத்து நிறுத்திய மகிந்தவின் பாதுகாப்புப் பிரிவினர் உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தனர். இதனை எதிர்த்து அழைப்பிதழ்களையும் ஊடக அடையாள அட்டைகளையும் ஊடகவியலாளர்கள் தங்கள் அடையாளத்தைத் உறுதிப்படுத்திய போதிலும் அதனைப் பொருட்படுத்தாத மகிந்தவின் பாதுகாப்பு பிரிவினர் கொட்டும் மழையில் ஊடகவியலாளர்களை இழி சொற்களால் திட்டி விரட்டினர்.

தனது "மகிந்தவின் சிந்தனைகளில்" ஊடகவியலாளர் நலன் பேணப்படும், பல்வேறு இதர சலுகைகள் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் என்றெல்லாம் குறிப்பிட்ட மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாவதற்கு முன்னரே ஊடகவியலாளர்களை இப்படி கீழ்த்தரமாக நடத்துகின்றாரே என சிங்கள ஊடகவியலாளர்கள் சிலர் அங்கு வேதனைப்பட்டுக் கொண்டனர்.

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய அரசு தயாரா?

## - ஐ.தே.க பா.உ ஜி.எல்.பீரிஸ் கேள்வி

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை 14 நாள் காலக்கெடு விதித்து இரத்துச் செய்ய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தயாராக இருக்கிறதா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அவர் பேசியதாவது:

டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு மற்றும் கண்டி உதவி வழங்குநர்கள் மாநாடுகளின் மூலம் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை சிறிலங்காவுக்கு வழங்க சர்வதேச சமூகம் ஒப்புக்கொண்டது. ஆனால் அமைதி முயற்சிகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னெடுக்காததால் அந்த நிதி முடங்கிப் போனது.

ரணில் விக்கிரமசிங்க கொண்டு வந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் அந்நிய முதலீடு அதிகரித்துள்ளதாகவும் பல உயிர்கள் காப்பற்றப்பட்டுள்ளதாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னைய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கம் அதிகாரப் பகிர்வுக்கான முன்னெடுப்புக்களை 1998-இல் மேற்கொண்டது. 2000 ஆம் ஆண்டு கூட்டாட்சி அரசுக்கான அரசியல் யாப்புச் சட்ட வரைவை பாராளுமன்றத்திலும் தாக்கல் செய்தது. இந்த நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டிய மகிந்த ராஜபக்ஷ இப்போது தலைகீழாக தனது நிலையை மாற்றிக்கொண்டுள்ளார்.

அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தை உக்கிரமாக எதிர்த்த ஜே.வி.பி தான் இப்போது மாகாண சபைப் பிரதிநிதித்துவம் மூலம் அந்தத் திருத்தத்தின் பயனை அனுபவித்து வருகிறது.

14 நாள் காலக்கெடு கொடுத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வருமா? அப்படிச் செய்தால் இந்த நாட்டுக்கு சாபக்கேடாக அது அமையும் ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் பின்னர் ஏன் அதை நீடித்துக் கொண்டிருக்கிறார்கள்? என்றார் பீரிஸ்.

# சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஈரானிலிருந்து ஆயுதங்கள்!

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு ஈரானிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சர் என்கிற வகையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஈரானுக்கு சந்திரிகா மேற்கொண்ட உத்தியோக பூர்வ பயணத்தையடுத்து இந்த வாய்ப்பு சிறிலங்காவுக்குக் கிடைத்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரான நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

# ஜே.வி.பி யின் அதிருப்தியாளர் அணி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு

(கொழும்பு)

சிங்களப் பேரினவாத கட்சியான ஜே.வி.பியின் போட்டிக்குழு (விகல்ப கண்டாயம்) சனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கெட்டிட்டிகொலவைசாக தனசங்கிராக சமித்தி அரங்கில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கு போட்டிக்குழு ஜே.வி.பியின் ஒருங்கிணைப்பாளர் மிகிர உடுமுல்ல தலைமை வகித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டுக்கு சென்றவேளை போட்டிக்குழு ஜே.வி.பியின் தலைவரான ஆர்.பி. பிரேமச்சந்திர கடும் தாக்குதலுக்குள்ளாகி இருந்தார். அவர் மீது ஜே.வி.பியினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. ஊடகவியலாளர் மாநாட்டில் ஆர்.பி பிரேமச்சந்திர கூறியதாவது:

றோகண விஜயவீரவின் பாதையில் செல்பவர்களாக ஜே.வி.பி யினர் இருந்தால் கட்சிக்குள் வர்க்க பேதம் இருக்கக் கூடாது. அமைச்சுப் பொறுப்புக்களுக்காக மோதிக்கொள்ளக் கூடாது. எம்மீது நீதி மன்றில் தாக்குதல் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது உண்மையே.

ஜே.வி.பி யின் அடிப்படைக் கொள்கைகள் இப்போது கைவிடப்பட்டுவிட்டன. இப்போது இருப்பது உண்மையான ஜே.வி.பி அல்ல. இது கலப்பின ஜே.வி.பி. நாட்டின் மிகப்பெரிய நகைச்சுவையாளர்களாக ஜே.வி.பியினர் உள்ளனர். அவர்கள் பாதுகாப்புக் கூண்டுக்குள் இருந்து கொண்டு பேசுகிறார்கள். விலை உயர்ந்த உடைகளோடும் செல்லிடப் பேசிகளோடும் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றார்.

# அரசியல் தலைவரொருவரை கொலை செய்ய பாதாள உலகக் குழுவினர் திட்டம்!

## சிறிலங்காவின் பொலிஸ் மா அதிபர் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் தலைவர் ஒருவரை படுகொலை செய்யத் திட்டமிட்டுள்ள பாதாள உலகக் குழுவைக் கைது செய்ய தென்பகுதி பிரதேசத் திற்கு பொலிஸ் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியவதாது:- சிறிலங்காவின் தெற்குப் பிரதேசத்தில் அரசியல் கட்சித் தலைவர் ஒருவரை படுகொலை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அக்கட்சியின் கொழும்பு அலுவலகத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து இந்த சதித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள பாதாள உலகக் குழுத் தலைவரைக் கைது செய்ய பொலிஸ் அதிகாரி டி.ஈ வெதசிங்க தலைமையிலான விசேட குழு அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்குள் அந்தக் குழுவினரை பொலிசார் சுற்றி வளைத்து விடுவார்கள் என எதிர் பார்க்கின்றோம் என்றார் சந்திரா பெர்னாண்டோ.

# குடாநாட்டை விட்டு படையினரே வெளியேறுங்கள் சனாதிபதித் தேர்தலை முற்றாக புறக்கணிப்போம்

## யாழ். இல் "மக்கள் படை" சுவரொட்டி

யாழ்.குடாநாட்டைவிட்டு சிறிலங் காப்படையினரை உடனடியாக வெளியேறுமாறு கோரியும் நடை பெறவுள்ள சிறிலங்கா சனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறும் மக்கள்படை என்ற அமைப்பு சுவரொட்டி ஒட்டியுள்ளது.

யாழ்.நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு பரவலாக இந்த அமைப்பினது சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இந்த சுவரொட்டிகளின் அடியில் "மக்கள் படையாழ். மாவட்டம்" என்று எழுதப்பட்டுள்ளது.

சிறிலங்கா படையினரை வெளி யேறுமாறு கோரும் சுவரொட்டிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப் பட்டிருந்தன.

அச்சுவரொட்டிகளில் இடம் பெற்றுள்ளவை:

"சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளே...! எம் தாயக மண்ணை விட்டு உடனே வெளியேறுங்கள்... இல்லையேல் உங்கள் ஆயுதங்களே எமக்குப் போதும் உங்களை வெளியேற்ற ..." என்று ஒரு சுவ ரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதித் தேர் தலைப் புறக்கணிக்கக் கோரும் சுவ ரொட்டியின் வாசகங்கள்,

"அன்புக்குரிய யாழ்.மக்களே!

சனாதிபதித் தேர்தலைப் பகிஷ் கரிப்போம். தமிழ் மக்களாகிய எமக்கு சனாதிபதிகளாக இருந்தவர்கள் செய்த அராஜகங்களும், துரோகங் களும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாதவை என்பது உங்களுக்கு நன்கு தெரியும். கடந்தகால அனு பவங்கள் எமக்குப் போதும்.

எனவே, எந்த சனாதிபதி வேட் பாளருக்கும் தமிழர் தாயகத்தில் இடமில்லை என்பதை உணர்த்து வோம்.

இதனால் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் வைத்தல், தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் ஒட்டுதல், அது தொடர்பான ஏனைய செயற்பாடுகள்அனைத்தையும் உட னடியாக நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இதை மீறுபவர்கள் மிக விரை வாகத் தண்டிக்கப்படுவார்கள் என்ப தையும் தெரிவித்துக்கொள்கின் றோம்.

இது எச்சரிக்கையல்ல கண்டிப் பான கட்டளை என்றும் அந்த சுவரொட்டியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (41)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் இராஜதந்திர நகர்வுகள் சிறிலங்காவில் விரிவாக்கம்

## அதிவிசேட தூதுவரும் இவ்வாரம் நியமனம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது வராலயம் ஒன்றினை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் திடீரென்று நிறுவியுள்ளது. இந்தத் தகவலை நேற்று சிறிலங்காவுக்கான வெளி நாட்டமைச்சு அறிவித் துள்ளது.

இந்தியக் கண்டத்தில் ஐரோப்பிய நாடுகள் ஒரு நல்லுறவை ஏற்படுத்தும் விதத்தில் இந்தத் திடீர் தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்ததாகத் தெரிவித்துள்ள போதும் இந்த இராஜதந்திர நகர்வு தொடர்பாக பலதரப்பிலிருந்தும் சந்தேகம் எழுந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங் கைக்கான அதிவிசேட இராஜதந்திரத் தூதுவர் இந்தவாரம் நியமிக்கப் படவுள்ளார். இலங்கையில் சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்ட மைப்பு உடன்படிக்கையினை கடந்த புதன்கிழமை புறந்தள்ளிய ஐரோப்பிய ஒன்றியம் வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கபட்டவர்களுக்கு என்று சிறிலங்கா அரசாங்கத்திடம் 150 மில்லியன் யூரோக்களை வளங்கியுள்ளதாக இரகசிய தகவல் கள் தெரிவிக்கின்றன. இந்த அதி விசேட தூதுவராலயத்தில் யூலியன் வில்சன் தூதுவராகவும் றொசான் லிமன் ஆலோசகராகவும் பிரதி ஆலோசகராக சண்டலி விஜயதிலக ஆகியோர் முக்கிய நியமனம் பெற்றுள்ளனர்.

# கலந்துரையாடல்

2005ஆம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதி பெற்ற கிளி.மாவட்ட புகுமுக மாணவர்களுக்கான பொதுக் கூட்டம்நாளைகாலை காலை 9.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ள மையால் அனைத்து சிரேஷ்ட மாணவர்களையும், புகுமுக மாணவர் களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத் தலை வர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சிறப்புற நடைபெற்ற திருக்குறள் மாநாடு

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினரின் ஏற் பாட்டில் திருக்குறள் மாநாடும் திருவள் ளுவர் விழாவும் நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் திருக் குறள் மாநாடும் திருக்குறள் சார்பு வினாவிடைப் போட்டி களும் நடத்தப் பட்டன. இப்போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட மத்திய கல்லூரி மாணவர்களும், முரசு மோட்டை முருகானந்தா மகாவித்தியாலய மாணவர்களும் பங்குபற்றினர். நேற்று நடை பெற்ற திருவள்ளுவர் விழா நிகழ் வானது கிளிநொச்சி முருகன் ஆலய முன்றலில் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமான தமிழர் கலைபண்பாட்டு ஊர்வலத்தோடு ஆரம பமானது. இவ் ஊர்வலத்தில் தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போல் தோற்றம் புனைந்த வாறும் இராவணன், பண்டாரவன்னியமன்னர்களின் தோற்றங்கள் புனைந்தவாறும் வணிகர் அமைப்புக்களைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றினர். இவர்களோடு பாடசாலை மாணவர்களின் கோலாட்டம், காவடியாட்டம் கும்மி நடனம் போன்ற பாரம்பரிய கலைநிகழ்வுகளும் ஊர்வலத்தில் இடம்பெற்றன. இவ் ஊர்வலம் பண்பாட்டு மண்டபத்தை சென்ற டைந்ததும் அங்கு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் மற்றும் தமிழ் மன்னர்களாக வந்திருந்த கலைஞர்களும் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கலை வாணன் ஏற்றினார்.

அடுத்துகிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க கொடியினை சங்கச் செயலாளர் ஏற்றினார். தொடர்ந்து அரங்கில் திருவள்ளுவரின் உருவப்படத்திற்கு கிளிநொச்சி மாவட்ட விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன், கிளிநொச்சிவலயக் கல்விப்பணிப்பாளர் குருகு லராஜா ஆகியோர்ஏற்றினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் திருக் குறள் பற்றிய சொற்பொழிவுகள் சிறப்புச் சொற் பொழிவுகள் என்பனவற்றோடு போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரி சில்கள் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச,தீ)

### மிகவும்...

வேண்டும். எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க அவர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு."சிறிலங்கா இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இருந்தால் நாம் கண்டிப்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத் திலிருந்து விலகி, அதன் பின்னர் யுத்தத்தைத் தொடங்குவோம். மறைவான நடவடிக் கைகளைக் காட்டிலும் அது தான் சரியானதாக இருக்கும்" எனத் தெரிவித்தார்.

### கழுத்தில்...

எனினும், பிற்பகல் 4.30 மணிக்குப் பின்னரே மானிப்பாய் பொலிசார் சடலம் இருந்த இடத்திற்குச் சென்று சடலத்தை மீட்டிருந்தனர். இதேநேரம் சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலி சாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து மானிப்பாய் பொலிசார் நேற்று மாலை 5.30 மணியளவில் சடலத்தை யாழ். வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். தற்போது. சடலம் யாழ்.போதனாவைத்திய சாலையின் பிரேதஅறையில் வைக்கப் பட்டுள்ளது.

(37.41,33,28,கீ)

### போ.நி.க.குழு...

எந்த ஒரு முடிவும் இனப்பிரச்சினையில் தொடர்புடைய இருதரப்பினரது ஆலோ சனைக்குப் பிறகே மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

### தமிழர்....

இருக்கவேண்டுமேயன்றி வெறுமனே நிதியை மையப்படுத்தியதாக இருக்கக் கூடாது.

சிறிலங்கா அரசினது திட்டமிட்ட செயற் பாடுகளால் பெரும்மெடுப்பிலான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கமுடியாத சூழல் எமது பிரதேசத்தில் உள்ளபோதும் வேறு உதவிகள் மூலம் நடைமுறைப்படுத்துகின்ற சிறிய சிறிய திட்டங்களை கூட சிறப்பானமுறையில் திட்ட மிட்டு தரமானதாக செயற்படுத்தவேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் உண்டு.

போர் இடம்பெற்ற காலங்களில் எமதுமண்ணில் நடைமுறையரசு சிறப்பாக செய லாற்றிவந்தாலும் திட்டமிடலுக்கும், அபிவிருத் திக்குமான முக்கியத்துவம் கூடுதலாகக் கொடுக்க முடியவில்லை.

தற்போதுள்ள சூழலில் கடந்தகால போர்ச் சூழலைக் காரணமாக கூறிக்கொண்டு திட்ட மிடலிலும், அபிவிருத்தியிலும் பின்தங்கிவிட முடியாது இவற்றில் நாம் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

தமிழர்தாயகத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப்பணிகள் எதிர்காலத்தில் பலநன்மை களைத் தரக்கூடிய விதத்தில் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட வேண்டும்.

எமதுதேசத்தை வளமான தேசமாக கட்டி யெழுப்புவதில் பொறியியலாளர்களின் பங்கு முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

திட்டமிலுக்கும் மேம்பாட்டுக்குமான செய லகத்தினால் விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ள கட்டடவடிவமைப்பு மற்றும் கட்டுமானங்கள் தொடர்பான வழிகாட்டும் நெறிகள் பற்றி வடக்கு கிழக்கில் பல்வேறு திணைக்களங்களிலும் பணியாற்றும் பொறி யியலாளர்களுடன் கலந்துரையாடும் சந்திப்பாக இது அமைந்தது.மேற்படிவழிகாட்டும் நெறி களை அடிப்படையாகக் கொண்டே எதிர் காலத்தில் கட்டுமானப் பணிகளும் அவற்றுக் கான அனுமதி மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### புலிகளின்...

நிலையை நோக்கி ஓடினார்.'

அவர்களில் ஒருவர் தடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். தப்பியோடிய மற்றொரு நபர் மீது தமிழீழ விடுதலைப்புலிகளின் காவ லரணில் நின்றவர்கள் எச்சரிக்கை வேட்டுக் கள்தீர்த்தனர். இதில்அந்த நபர் படுகாயமடைந்த நிலையில் சூனியப் பிரதேசத்தில் வீழ்ந்தார். அவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த மதிமுகராஜா விஜயவர்மன் (வயது-27) என்பவரே காயமடைந்ததாக அடையாளம் காணப் பட்டுள்ளது.அவர் 1998 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளராக இருந்த பொன் மதி முகராஜாவின் மகனாவார்.

நேற்றைய சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆர்வே...

அளிப்பதற்கு சர்வதேச ரீதியாக ஆற்றவேண்டிய பணிகள் இருந்தாலும் அது போதுமானதல்ல. பொறுப்பை ஒழுங்காக நிறை வேற்ற வேண்டுமாயின் அந்தந்த அரசாங்கங்கள் தங்களுக்கான கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

ஆசியாவில் பெரும் அழிவுகளுக்கு முகம் கொடுத்தவொரு நாடாக இலங்கை உள்ளது. யுத்தத்தினால் பத்து இலட்சத்திற்கும் மேற் பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆழிப் பேரலையினால் அதற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட அளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களில் சிலரை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பக்கூடிய நிலையுள்ளது.

அவர்களை அவர்களின் இடங்களுக்குத் திருப்பி அனுப்ப முடியுமாயின் அது ஏனை யவர்களுக்கும் தங்களின் இடங்களிற்குச் செல்வதற்கு தைரியம் ஊட்டுவதாக அமையும். ஆனால், இடம்பெயர்ந்தவர்களுக்கு மீண்டும் தங்களின் இடங்களிற்குச் செல்ல முடியாவிடில், செல்ல அவர்கள் விரும்பவிடில், அவர்கள் தற்போது இருக்கும் இடங்களில் தேவையான பாதுகாப்பினையும், அவர் களுக்குத் தேவையான காணி வசதிகளையும் வழங்க வேண்டும்.

இன்று உலகம் முழுவதும் வன்முறைகள், மோதல்களால் இடம்பெயர்ந்துள்ளவர்களின் எண்ணிகை சுமார் 25 மில்லியன் ஆகும். எனினும் உள்ளக இடப்பெயர்வுகள் குறித்து போதியளவு கவனம் செலுத்தப்படுவதில்லை. இடம்பெயர்ந்தவர்களுக்காக மட்டும் செயற்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பொன்று இல்லாமை இதில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

### யாழ்.இல்...

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க முடிவு செய்திருக்கும் காரணத்தால் இந்தப் பிரச்சாரக் கூட்டத்துக்கு மக்கள் எவரும் வரமாட்டார்கள் என்பதனால் இக்கூட்டத்தில் மக்களை வரவழைக்கும் நோக்குடன் ஈ.பி.டி.பியினரால் திட்டமிட்டமுறையில் ஏமாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

அதாவது யாழ். குடாநாட்டில் வேலைவாய்புக்காகக் காத் திருக்கும் பட்டதாரிகளுக்கும் நிரந்தர வேலை வாய்ப்பு நியமனத் துக்காகக் காத்திருக்கும் சமயாசமய ஊழியர்கள் மற்றும் தொண்டராசிரியர்கள் ஆகியோருக்கும் பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தமான கூட்டம் ஒன்று நடை பெறவிருப்பதால் யாழ். நகர் சிறீதர் திரையரங்கில் உள்ள தமது அலுவலகத்துக்கு வருகைதருமாறு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு விடுத்திருந்தார்.

இதனை நம்பி சிறீதர் திரை அரங்கில் இருக்கும் ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு நேற்றுக் காலை9.00 மணியளவில் கூடியோர் தெல்லிப்பழையிலேயே இவ் வேலைவாய்ப்பு சம்பந்தமான கூட்டம் இருப்பதாகவும் அங்கு அனைவரையும் வருமாறு கூறி பேருந்துகளில் ஏற்றி இராணுவ பொலிஸ் பாதுகாப்புடன் தெல்லிப்பழைக்கு அழைத்துச் சென்றனர்.

தெல்லிப்பழைக்கு அழைத்துச் சென்று நீண்டநேரம் அவர் களைக் காத்திருக்கச் செய்த ஈ.பி.டி.பி யினர் மீண்டும் அங் கிருந்து அவர்களை வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துச்சென்றனர்.

அங்கு கல்லூரி மண்டபத்தில் அனைவரையும் அமருமாறு கூறிய ஈ.பி.டி.பி.யினர் சிறிது நேரத்தில் இங்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் , அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வருகை தரவுள்ளதால் அவர்கள் வரும்போது வரவேற்புக்கோஷங்களை எழுப்புமாறு நிர்ப்பந்தித்தனர்.

சிறிதுநேரத்தில் சுமார் ஒரு மணியளவில் அங்கு மேடையில் தோன்றிய பிரதமர் மகிந்தராஜபக்ஷ வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனக்கு வாக்களிக்குமாறு கோரியதுடன் தான் சனாதிபதியானால் நாட்டில் அமைதி ஏற்படும் என்றும்- புலிகளுக்கும் அரசுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் உறுதியளித்தார்.

எனினும் இவர்களுக்கு ஈ.பி.டி.பியினர் கூறியது போல எந்த விதமான வேலைவாய்ப்பு விடயங்கள் பற்றியும் அங்கு பேசப்படாததால்அழைத்துச்செல்லப்பட்டோர் இனவாதப் பிரச்சாரத்துக்காக தமதுநம்பிக்கையைஈ.பி.டி.பி விலை பேசிவிட்டதாக விசனம் தெரிவித்தனர்.பின்னர் இவர்களை யாழ். நகரில் கொண்டு வந்துவிட்ட ஈ.பி.டி.பியினர் அவர்களுக்கு எந்தவிதமான ஆகாரங்களைக் கூடவழங்கவில்லை.

(33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.